
# புதிய உலகம்

ஆடி — ஆவணி









# நற்சமூக நடுநிலைய சிறப்பிதழ்


பன்னிரண்டாவது ஆண்டு

மலர்: 71

ஆடி — ஆவணி 1989

ஆசிரியர் :
இ. ஜே. அருமைநாயகம்.

துணை ஆசிரியர் :
நாவண்ணன்.

வெளியீடு — விநியோகம் :
எஸ். ஜே. இம்மனுவேல்.

தொடர்பு :

' புதிய உலகம் '
நற்சமூக நடுநிலையம்
115, நாலாம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்.

"PUTHIYA ULAKAM"
CENTRE FOR BETTER SOCIETY
115, 4th Cross Street,
JAFFNA.

விலை ரூபா 4-50

சந்தா ஆண்டுக்கு 30/-


## சுடர் வரிசை


| | பக்கம் |
|---|---|
| எமது பார்வை ... | 1 |
| SEDEC வழியில் HUDEC ... | 3 |
| புதியதோர் உலகைக் ... | 6 |
| நிலையச் செய்தி ... | 7 |
| நடிகமணி வைரமுத்து ... | 9 |
| நாடக உலகில் ஒரு நடிக மணி ... | 10 |
| நிவாரணமும் புனர்வாழ் ... | 15 |
| வேதனையே மிஞ்சிவிடும் ... | 24 |
| சமூகவிழுமியங்கள் ... | 25 |
| மலரும் உன் வாழ்வு ... | 28 |
| நித்யா நேசமாகிறுள் ... | 29 |
| ம.மு. நிலையத்தில் நிவார ... | 37 |
| இளமைக்காலம் ... | 42 |
| நாளும் பொழுதும் .. | 43 |
| ம. மு. ந. நிலையம் அபிவிருத்திப் ... | 49 |
| பிறர்கொலையல்ல தற்கொலை ... | 54 |
| உங்கள் பார்வை ... | 55 |



படைப்புக்களுக்குப் பொறுப்புப் படைத்தவர்களே
கருத்துக்களுக்கு உரியவர்கள் உரைத்தவர்களே — ஆர்.
(FOR PRIVATE CIRCULATION ONLY)

# எமது பார்வை

## "பொதுநலம் காப்போம்"

இனிமனித சமூக அமைப்புக்கள் மத்தியில், வாழ்வினை வழிநடத்திச் செல்ல வழிதெரியாது தவிக்கும் மக்கள் மத்தியில், தங்கள் எதிர்கால வாழ்வை எண்ணி ஏக்கமுறும் மக்களுக்கு, பொழுது விடிந்தாலும் எம் வாழ்வில் விடிவில்லையே என்று கலங்கித் தவிக்கும் உள்ளங்கட்கு, அவர்கள் கலக்கங்களைக் களைந்து, அவர்கள் ஏக்கங்கட்கு ஆக்கங்கள் அளித்து, அவர்கள் வாழ்வின் இன்னல் போக்கி, இன்புற்று வாழ வழிசமைப்பவர்கள் யார்? செயற்படுகின்றவர்கள் யார்? இவற்றை நிறைவேற்ற முன்வருபவர்கள் யார்? என்று கேட்டால் அது பெரும் கேள்விக்குறியாக இருக்கின்றது.

உலகம் மாறிக்கொண்டு வருகின்ற வேளையில், உலகோடு இணைந்து அதில் வாழும் மனிதனும் மாறிவருகின்றான். நான் வாழ்ந்தால் போதும்; எனது குடும்பம் முன்னேறினால் போதும்; எனது சுகம், எனது குடும்பம், எனது சொத்து, எனது நலன்கள் என்பவை பாதுகாக்கப்பட்டால் அதுவே போதும் என்ற நிலையில் இன்று மக்கள் தன்னலம், சுயநலம் என்னும் ஆடை அணிந்து ஆடம்பரமாக வாழுகின்றார்கள்.

தாழ்ந்தவன் உயர்நிலையை அடைய, வறியவன் வாழ்வில் வளர்ச்சிபெற, ஏழைகளின் ஏழ்மை நிலையை நீக்கி, துயருறுவோர்க்கு இன்பத்தைக் காட்ட, முன்னேற்றம்பெற முயல்வோர் நல்லேற்றம் பெற நலம்புரிய, சுயநலம் மறந்து, சொந்தமெலாம் துறந்து பொது நலம் நோக்கிப் பொதுப்பணி புரிய தம்மை அர்ப்பணிப்போர் அரிதாகக் காணப்படும் இக்காலத்தில், "மக்கள் சேவை மகேசன் சேவை" என்ற பொதுநல உளப்பாங்குடன், பிறர்நல உணர்வுடன் பணிபுரிய ஓர் அமைப்பு உண்டு என்பதை எண்ணுகின்றவேளையில் இதை "நாம் பெற்ற பெரும் பேறு" என்றே கருதவேண்டும்.

"மனித முன்னேற்ற நிலையம்" பற்பல முன்னேற்றகரமான செயல்களை, பல இன்னல்கள் மத்தியில் முன்நின்று செய்து வருகின்றது. இதை நாமனைவரும் காணக்கூடியதாக இருக்கின்றது. இதன் செயற்பாடு உண்மையிலேயே மக்கள் மத்தியில் ஒரு மாபெரும் மாறுபாட்டை உண்டுபண்ணி வருகின்றது. இதனை நாம் இவ்வமைப்பின் தற்கால செயற்பாடுகளில் இருந்து அறியக்கூடியதாக இருக்கின்றது. இது அண்மைக் காலத்தில் எமக்கு அறிமுகப்படுத்தப்பட்ட

அமைப்பாக இருந்தாலும் இதன் விரைவான செயற்பாடுகளினால் சமூகங்களில் ஏற்பட்ட மாற்றங்கள், இதன் செயற்திறனுக்குத் தக்க சான்று பகர்கின்றது.

இவ்வமைப்பானது கிறிஸ்தவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் இயங்குகின்றது. ஆயினும் இது இன, மத, சாதி, சமய, மொழி, கலாச்சார மாறுபாடுகள், வேறுபாடுகள் ஏதுமின்றி யாவர்க்கும் பொதுப்பணி புரிகின்றது. "மனித முன்னேற்ற நிலையம்" என்ற பெயரைத் தாங்கிய இந்நிறுவனம் இதன் பெயருக்கேற்ப யாவர்க்கும் முற்றும் முழுதுமாகப் பொதுப்பணி புரிவதைத் தனது கடனாகக் கொண்டு இயங்கிவருகின்றது.

மனித சமூகங்கள் எந்தெந்த வழிகளில் பின்னடைந்து உள்ளன? சமூக அமைப்புக்களின் வளர்ச்சிப்பாதையில் தடைக்கற்களாக உள்ள காரணிகள் எவை? மனித முன்னேற்றத்தின் முட்டுக்கட்டைகள் எவை? என்றவாறு யாவற்றையும் ஆராய்ந்து, அறிந்து அவற்றிற்கான மாற்று வழிகளை ஆக்கி, அமைத்து, ஆக்ககரமான முன்னேற்றகரமான முயற்சிகளை இது முன்நின்று செய்கின்றது.

மனித முன்னேற்றப் பாதையின் ஒவ்வொரு படியிலும் இதன் செயற்பாடு மிகவேகமாகச் சென்றுகொண்டிருக்கின்றது. மாந்தர் அனைவரதும் உடல், உள, ஆன்மீக தேவைகளை அறிந்து அதன் வழிகள்மீது இது செயற்படுகின்றது. மக்களின் தாழ்வுநிலை அறிந்து அவர்கள் வாழ்வின் உயர்ச்சிக்கு வழிகோலுகின்றது. அதற்காகத் தன்னாலான அரும்பெரும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

வறுமையின் வடிவங்கள் இன்று எம்நாட்டில் மலிந்துவிடக்கின்றது. அரசியல் சீர்கெட்ட நிலை காரணமாக இன்று எம் நாட்டில் வறுமைகள் பல்வேறு வடிவங்களில் உருவெடுத்திருப்பதைக் காணலாம். இப்பல்வேறு வடிவங்களையும் சீர்தூக்கிப் பார்த்து அவற்றைத் தீர்ப்பதற்கான காரணிகளைக் கண்டறிந்து, அதனைப் போக்குவதற்கு தனது ஆக்கத்தையும் ஊக்கத்தையும் அளிக்கின்றது. இவ்வாறு மனித முன்னேற்ற நிலையம், "மனித முன்னேற்றத்தின் மூலைக்கல்லாக" செயற்பட்டு வருகின்றது.

இம்முன்னேற்ற நிலையத்தின் செயற்பாடுகளை எம் ஊனக்கண்களால் காணும் நாம், அவற்றை எம் மனக்கண்முன் இருத்துவோமாக. அதன் வழிகளை நாமும் பின்பற்றுவோம். அதன் செயல்கட்கு ஆக்கம் அளிப்போம், ஊக்கம் கொடுப்போம். நாமும் இவ்வமைப்போடு இணைந்தோ அல்லது தனியாகவோ செயற்படுவோம். மனித முன்னேற்வத்துக்காய் உழைப்போம். எமது ஆக்கம்நிறைந்த செயற்பாடுகளை முன்வைப்போம். சமூகத்தை முன்னேற்ற முயற்சிப்போம். தன்னலம் மறந்து தியாகங்களை ஏற்கத் தயாராகுவோம். சமூகத்தை முன்னேற்றுவோம். நாமும் முன்னேறுவோம்.

# SEDEC வழியில் HUDEC

உலகின் எட்டுத்திக்கும் பரந்து, இயேசுக்கிறிஸ்துவின் பொய்யா மொழி வழிசெல்லும் கத்தோலிக்க திருச்சபையில் நீதி — சமாதான — அபிவிருத்தி ஆணைக்குழு செயலாற்றுகின்றது. இலங்கை ஆயர் பேரவையின் சமூகப் பணிக்கரமாகிய 'சமூக—பொருளாதார—அபிவிருத்தி நிலையம்' (SEDEC) இதன் செயலகம். யாழ். மறைமாவட்டத்தின் (யாழ்- முல்லை-கிளி-மாவட்டங்கள்) நீதி, சமாதான அபிவிருத்தி ஆணைக்குழுவின் செயலகம் "மனித முன்னேற்ற நிலையம்" (HUDEC) என அழைக்கப்படும். இது 1973-ல் யாழ். ஆயர் மேதகு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களின் பெரு முயற்சியினால் ஆரம்பிக்கப்பட்டது.

நாட்டில் நீதி தழைத்தோங்கவும், சமாதானம் நிலவவும், சாதி சமய மொழி இன குல வேறுபாடின்றி சகல துறைகளிலும் செயலாற்றுகின்றது.

## நிலையத்தின் செயற்பாடு:

மக்களின் இன்ப துன்பங்களும் தேவைகளும் மக்கள் மத்தியில் வாழும் அருட்தந்தையர் (பங்குக் குருக்கள்) மூலமாக எமக்கு அறிவிக்கப்படுகின்றன. குறைகளை அறிந்ததும், யாழ். ஆயரின் அனுமதிபெற்று பங்குத்தந்தையர் வழியாகவே உதவி செய்கின்றது. இயற்கை அல்லது மனிதனால் ஏற்படும் அழிவுகளின் பொழுது "வடக்கு-கிழக்கு கத்தோலிக்க நிவாரண" பணியகம் வழியாகவும், அபிவிருத்தித் திட்டங்களுக்கு "செடெக்" நிலையம் மூலமாகவும் உதவிகள் பெற இவ்வமைப்புகளின் பங்காளிகளாகவுள்ளது.

இவ்வமைப்பின் ஆரம்பமான (SEDEC) செடெக் நிறுவனத்தின் ஆரம்ப வரலாற்றையும், அதன் பணியையும் இவ்விடத்தில் நினைவுகூருவது சாலவும் பொருந்தும்.

இலங்கை ஆயர் குழுவின் தலைவராக அவர் இருந்த பொழுது சமூக பொருளாதார அபிவிருத்தி நிலையத்தை ஆரம்பித்தார். இது அவரின் தூர திருஷ்டியையும் முன்னோக்கையும், ஏழை மக்கள்மேல் அவர் கொண்டிருந்த ஆழமான அன்பையும், அக்கறையையும் எடுத்துக் காட்டுகின்றது. 1960ம் ஆண்டுகளில் இலங்கைத் திருச்சபையில் புதிய சிந்தனைகள் நுழைந்து வாழத்தொடங்கிய காலம். இந்தத் தசாப்தத்தில்

தான் சமூக அப்போஸ்தலத்துவத்தின் முக்கியத்துவமும், இத்தகைய சமூக சேவைகளின்மூலம் இறையரசைக் கட்டியெழுப்பும் முக்கியத்துவமும் உணரப்பட்டது. இந்தச் சிந்தனைகளுக்குச் செயலுருவம் கொடுத்த ஆரம்ப கர்த்தா மறைந்த கருதினல் ஆவார்.

இந்தச் சிந்தனைகளால் உந்தப்பட்டு, பின்தங்கிய மக்கள் மத்தியில், குறிப்பாக விவசாயிகள், கடற்றொழிலாளர், தோட்டத் தொழிலாளர் மத்தியில் சமூக முன்னேற்ற நடவடிக்கைகள் பல ஆரம்பிக்கப்பட்டன. இந்த நடவடிக்கைகளைச் சரியான முறையில் வழி நடாத்த சேவைகளை இணைத்துச் செயலாற்ற ஒரு தேசிய நிறுவனம் தேவை என்பதை முதலில் உணர்ந்தவர் மறைந்த கருதினல் ஆண்டகை அவர்களே. அவரின் அயரா முயற்சியால் இலங்கைத் திருச்சபையின் சமூகசேவை தேசிய நிறுவனமான சமூக பொருளாதார அபிவிருத்தி (செடெக்) நிலையம் ஆயர் பேரவையின் பூரண ஆசிருடனும் அனுமதியுடனும் 1968-ல் ஆரம்பிக்கபபட்டது.

கொழும்பு — 8, கின்சி ரோட், 133—ம் இலக்கத்தில் இயங்கி வரும் இச் 'செடெக்' நிறுவனமானது இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவையின் சமூகசேவைக் கிளையாக இயங்கி வருகின்றது. இந்த நிலையத்தில் இன்று "கத்தோலிக்க ஆயர் பேரவையின் நீதிக்கும் சமாதானத்துக்குமான ஆணைக்குழுவின் செயலகமும்" "செடெக்" நிலையமும் இயங்கி வருகின்றன.

'செடெக்' என்று சுருக்கமாக அழைக்கப்படும் இந்நிலையம் கொழும்பில் இருந்தாலும். அது கொழும்புப் பகுதிக்கு மாத்திரம் பணியாற்றும் நிலையம் அல்ல. மாறாக அது இலங்கையிலுள்ள பத்து கத்தோலிக்க மறைமாவட்டங்களுக்கும் பணியாற்றும் ஒரு பொது தேசிய நிலையமாகும்.

இன்று நாம் மறைந்த கருதினலுக்கு தலைவணங்கி மரியாதை செலுத்துவது அவர் இலங்கையில் முதலாவது கருதினல் என்பதற்காக மட்டுமல்ல அவர் ஏழை மக்களின் முன்னேற்றத்திற்கு வித்திட்டவர் என்ற காரணத்திற்காகவுமேயாகும்.

1968-ம் ஆண்டு நிறுவப்பட்ட 'செடெக்' நிலையம், இன்று 20 வருடங்களின்பின் தனது நோக்கங்களை, இலட்சியங்களை நன்கு உணர்ந்து செயலாற்றும் நிலையமாக விளங்குகின்றது. மக்களின் அபிலாசைகளை அதிகமதிகம் உணர்ந்து கொள்ளும்போதுதான் இறையரசின் பெறுமதிகளை மக்கள் மத்தியில் விதைக்கமுடியும் என்பதையும் 'செடெக்' நன்குணர்ந்துள்ளது. கடந்த இருபது ஆண்டுகளாக 'செடெக்' நடாத்திய தேசிய கலந்துரையாடல்கள் கருத்தரங்குகள் போன்றவற்றின் மூலம் தனது நோக்கங்கள், இலட்சியங்கள் கிறிஸ்தவமானது என்றும், இவற்றின் மூலம் நீதியான, சமத்துவமான சமுதாயத்தைக்

கட்டியெழுப்ப முடியுமென்பதையும் அது உணர்ந்துள்ளது. இந்த முயற்சி வெற்றிபெற சகல மட்டங்களிலுமுள்ள மக்களின் ஒத்துழைப்பு அவசியம் என்பதையும் அது உணர்ந்துள்ளது.

தனது நோக்கங்கள், இலட்சியங்கள் மூலம் சமுதாய மாற்றம் ஏற்பட வேண்டுமானால், மக்களுக்கு விழிப்புணர்ச்சி கொடுத்து அவர்களை ஒழுங்குபடுத்த வேண்டுமென்பதையும் அது விசுவசிக்கின்றது. இருபது வருடகால அனுபவம்தான் அது இந்த முடிவிற்கு வர உதவியது. ஆரம்பத்தில் 'செடெக்' நிவாரணசேவைகளில்தான் தனது கவனத்தைச் செலுத்தியது. சிறிது சிறிதாகச் சிறிய முன்னேற்ற நடவடிக்கைகளில் தனது கவனத்தைத் திருப்பியது. இதன்மூலம் மக்கள் தங்கள் தேவைகளை ஓரளவு பூர்த்திசெய்ய முடிந்தது. ஆனால் இந்த இரு முறைகளினாலும் பூரண மனித முன்னேற்றத்தைக் கொண்டுவர முடியாதென்பதையும் அது உணர்ந்துள்ளது. எனவே இன்று அது ஒரு நீதியான, சமத்துவமான சமுதாயத்தைக் கட்டியெழுப்ப வேண்டுமென்றும், மக்களை ஒழுங்குபடுத்துவதன் மூலம்தான் சமுதாயத்தில் மலிந்துள்ள பாவ அமைப்புகளை மாற்ற முடியுமென்றும் அது நம்புகின்றது. இந்த நிலைக்குச் 'செடெக்' வருவதற்கு ஆரம்பத்திலிருந்தே அதற்குக் கொடுக்கப்பட்ட விழிப்புணர்ச்சியே காரணமாகும். இந்த விழிப்புணர்வை ஓரளவுக்கு ஊட்டியவர் மறைந்த கருதினால் ஆண்டகையேயாவார்.

மறைந்த கருதினால் ஆண்டகையின் கடிதங்கள், கட்டுரைகள் ஆகியவற்றை வாசிப்போர் அவர் எத்தகைய பரந்த சமூக நோக்கைக் கொண்டிருந்தார் என்பதை இலகுவில் புரிந்துகொள்ள முடியும். கத்தோலிக்க சமூக நோக்கானது அகில உலகைச் சார்ந்ததாகும். ஆகவே 'செடெக்' நிறுவனம் சகல மனிதருக்கும் சேவை ஆற்றும் நிலையமாக இயங்கி வருகிறது.

எந்தவிதமான மத, இன, மொழி வேறுபாடின்றி மக்கள் முன்னேற்றத்திற்காகப் பணிபுரியக்கூடிய சமூக பொருளாதார முன்னேற்ற நிலையத்தை உருவாக்கிய கருதினால் கூரே ஆண்டகைக்கு நாம் சிரம் தாழ்த்தி மரியாதை செய்கிறோம்.

# புதியதோர் உலகைக் காண்போம்

செல்வி கனகா மாடசாமி ஆச்சாரி (மஸ்கெலியா)

புதியதோர் உலகை சமைத்திடுவோம் — அதை
புண்ணிய நாடெனப் புகழ்ந்திடுவோம்
சாதிமத பேதத்தை அழித்திடுவோம் — இங்கு
சகலரும் சமமென்று கூறிடுவோம்.

❋❋ ❋❋

ஏற்றத் தாழ்வுகளை ஒழித்திடுவோம் — இங்கு
எல்லோரும் இன்புற்று வாழ்ந்திடுவோம்
பெரியோரின் போதனையை மதித்திடுவோம் — அதை
பெரிதாகப் போற்றி மகிழ்ந்திடுவோம்.

❋❋ ❋❋

சீதனக் கொடுமையை ஒழித்திடுவோம் — இங்கு
சித்திரப் பெண்களை வாழவைப்போம்
வறுமையால் வாடிடும் ஏழைகட்கு — நாம்
வளமான பாதையைக் காட்டிடுவோம்.

❋❋ ❋❋

ஆண்களும் பெண்களும் சமமென்று — நாம்
அயராது ஆடிப்பாடி உழைத்திடுவோம்
அன்பும் பண்பும் நமக்குண்டு — ஆம்
அதை மற்றவர் மனங்களில் புகுத்திடுவோம்
போட்டி பொறாமைகள் ஒழித்திடுவோம் — இப்
பொல்லா உலகை மாற்றிடுவோம்.

## சமூக தலைமைத்துவப் பயிற்சிநெறி 1988/1989

# சான்றிதழ் வழங்கும் வைபவம் : தொகுப்பு

சமூகத்தின் எல்லா மட்டங்களிலும் இருந்து தலைமைத்துவப் பண்புகள் வளர்த்தெடுக்கப்பட வேண்டியமை நற்சமூக உருவாக்கத்திற்கு இன்றியமையாத அம்சமாகும். நற்சமூகத்தின் உருவாக்கத்திற்காகப் பணிபுரிந்து வரும் நற்சமூக நடுநிலையம் இப்பாரிய பணியில் "சமூக தலைமைத்துவப் பயிற்சி நெறி 1988/1989 மூலம் குறிப்பிடத்தக்க பங்கினை ஆற்றியுள்ளது. இப்பயிற்சி நெறிக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் 24-06-89 சனிக்கிழமையன்று யாழ்ப்பாணம் நற்சமூக நடுநிலையத்தில் அருட்திரு. கலாநிதி. S. J. இம்மானுவேல் (நிலைய இயக்குனர்) அவர்களது தலைமையில் இடம்பெற்றது திரு. திருமதி. அன்ரன் அல்பிறற் ஆகியோர் இவ் வைபவத்தில் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

பிற்பகல் 3 - 00 மணியளவில் திரு. அன்ரன் அல்பிறற் அவர்கள் மங்கல விளக்கேற்றி வைக்க ஆரம்பமான நிகழ்ச்சியில் இறை வணக்கமும் தொடர்ந்து நிலைய கீதமும் இசைக்கப்பட்டன.

தலைமையுரையாற்றிய அருட் திரு. S. J. இம்மானுவேல் அவர்கள் "இன்றைய சமூகம் மிகவும் இருள் மயமான சுரங்கப் பாதையினூடே செல்கையில் சிறு சிறு விளக்குகளை நாம் இங்கிருந்து ஏற்றுகின்றோம். பயிற்சியில் பங்கு பற்றியவர்கள் தத்தம் விளக்குகளைப் புயலும் இடிமழையுமாய் சூழும் பிரச்சனைகளிலிருந்து பாதுகாத்து நன்மை செய்யும் உணர்வுடன் உந்து சக்தியுடன், பரந்த நோக்குடன் செயற்பட வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்து அறிக்கை வாசித்த திரு. ஜோர்ஜ் அவர்கள் தலைமைத்துவப் பயிற்சி நெறியின் அமைப்பு தன்மை பற்றி விரிவாக எடுத்துரைத்தார். அச்சம் பீதி நிறைந்த இன்றைய சூழ்நிலையில் பரவலான முறையில் பயிற்சியாயாளர் தெரிவு செய்யப்பட்டமை இப் பயிற்சி நெறியின் பயனையும் உயர்த்தியுள்ளதென்பதையும் குறிப்பிட்டார்.

கையில் ஒளி காலும் மெழுகுவர்த்திகளை ஏந்தி சமுதாயத்தில் ஒளியேற்றச் செல்வோர் என்ற அர்த்தம் தொனிக்க பயிற்சியாளரது அர்ப்பணம் இடம்பெற்றதையடுத்து திருமதி. அன்ரன் அல்பிறற் அவர்களால் சான்றிதழ் வழங்கப்பட்டது.

பயிற்சியாளர் சார்பில் பதிலுரையளித்த இந்திரராஜா அவர்கள் சமூகத்தில் அமைதி, சமாதானம், ஒற்றுமை மேலோங்கும் வகையில் தத் தமக்கு உகந்த உருவத்தில் ஒளியாக விளங்கி சமூகத்திற்குத் தாம் நற்பணியாற்ற முன் வந்துள்ளதாக உறுதியளித்தார்.

தொடர்ந்து, விரிவுரையாளர் சார்பில் தகவுரையாற்றிய திருவாளர் செபஸ்தியாம்பிள்ளை அவர்கள் தமது தகவுரையில் பயிற்சியாளர்கள் நம்பிக்கையிழந்து தவிக்கும் இன்றைய சமூகத்திற்கு நம்பிக்கையூட்டும் ஒளி விளக்குகளாய்த் திகழ வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

அடுத்து, புதிய உலகம் சிறப்பிதழ், "புதிய உலகம்" சஞ்சிகையின் ஆசிரியர் அருட்திரு. E. J. அருமைநாயகம் அவர்களால் வெளியிடப்பட்டது.

பிரதம விருந்தினரான திரு. அன்ரன் அல்பிறற் அவர்கள் தமதுரையில் இன்றைய காலகட்டத்தில் சேவையின் தேவைபற்றியும், தலைமைத்துவப் பண்புகள் இயல்பாகவே மனிதர்களிடம் ஊறிக் கிடப்பினும் இத்தகைய பயிற்சிநெறி மூலம் அப்பண்புகள் முழுமைபெற முடியுமென்பது பற்றியும் குறிப்பிட்டார்.

இறுதியாக, செல்வி சித்திரா தேவி அவர்களது நன்றியுரையுடன், இறைவணக்கம், நிலையகீதம் என்பன இசைக்கப்பட்டு. நிகழ்ச்சி இனிதே நிறைவெய்தியது.

---

ஜெனரல் கரிபால்டி இத்தாலியின் புரட்சிவீரன். அரசுக்கு எதிராக நடாத்திய போரில் படுதோல்வியடைந்தான். மீண்டும் தன் படையினரை ஒன்றுசேர்த்தான். அவர்களை வரிசையாக நிற்கவைத்த அவன், "தோழர்களே நாம் தோல்வியடையவில்லை. இது வெற்றியின் முன் அடையாளம். மீண்டும் நான் போராடப் போகின்றேன். உங்களுக்குக் கொடுக்க என்னிடம் ஒன்றும் இல்லை. பசியும் பட்டினியும்தான் நான் உங்களுக்குக் கொடுக்கக்கூடிய பரிசு. ஊனமும் உதிரமும்தான் நீங்கள் பெறக்கூடிய விருதுகள். இரண்டு நிமிடங்கள் நான் கண்களை மூடித் திறப்பேன், உங்களில் போருக்குவரப் பிரியமுள்ளவர்கள் ஓர் அடி எடுத்து முன்னேவந்து நில்லுங்கள்" என்றுகூறி கண்களை மூடினான். இரண்டு நிமிடங்கள் கழித்து கண்களைத் திறந்தபோது படைவரிசையில் எதுவித மாற்றமும் இல்லாது இருப்பதைக் கண்டு மனம் சோர்ந்தான். அவனது சோர்வைக்கண்ட படைவீரர்களுள் ஒருவன், "பிரபு படைவீரர்கள் அனைவருமே ஓர் அடி முன்வைத்து வந்திருக்கிறார்கள். நமக்கு இனிமேல் கவலை இல்லை" என்றான்.

# நடிகமணி வைரமுத்து

— ஐயா ஜோசப் —

அழகுதமிழின் ஒலி அமுதமழையெனவே
அரங்கில் இசைபொழியச் செய்தான்
பழகுபாவின் சுவை பரந்து இனிக்கும்படி
பாடும் குயிலாகி நின்றான்.

★

நாட்டுக்கூத்தின்வலி கேட்டுக்களித்திடவே
நல்ல புதுவழிகள் ஊட்டி
வீட்டுப் புறத்தவரும் வியந்து நிலைக்கும்படி
விந்தைக் கலைவடிவம் தந்தோன்.

★

பட்டிதொட்டிபல சுற்றிச்சுலழவந்து
கூத்தின் மகத்துவத்தைக் கூறி
எட்ட நின்றவரும் கிட்ட நெருங்கிவந்து
தட்டிக் கொடுத்திடவே செய்தான்.

★

சத்தியத்தின்வழி இத்தரைக்கு அழிவற்றதொரு
தத்துவம் எனமனதில் ஓர்ந்தான்
வித்தகமணி மெய்யுரை அரிச்சந்திரன் மாட்சி
மேதினியில் புகழ்பாட நின்றான்.

★

வைரத்தின் புகழ்மிக்க வலிமையாளன்
வற்றாத இசைஞானக் காவலன்
"வைரமுத்து" எனும் புகழ்பூத்த நாமத்தால்
நாளும் கலைத்தாயின் கமலத்தை வழிபட்டோன்.

# நாடக உலகில் ஒரு நடிகமணி

திரு. நடமாடி அவர்களின் இக்கட்டுரை 07-08-89 இரவு 9—30 மணிக்கு திரு. வி. என். மதியழகன் அவர்களால் இலங்கை வானொலியில் வாசித்து ஒலி பரப்பப்பட்டது. — ஆர்

நாடக உலகில் ஒரு 'நடிக மணி' என்றால் அது காங்கேசன் துறை வசந்தகான சபா வி. வி. வைரமுத்து அவர்களைக் குறிக்கும் 'காங்கேயன்' வந்து இறங்கிய துறையில் அவர் பிறந்தார். வாழையடி வாழையாகத் தழைத்து வந்த அண்ணாவி மரபிலே வந்தவர் நடிகமணி. ஆகவே அந்த மீன்குஞ்சுக்கு இசை நாடக உலகில் நீந்தக் கற்றுக் கொடுக்கும் அவசியம் ஏற்படுமா? தானாகவே நீந்தினார். இசை நாடகக் கடலைக் கரை சேர்ந்தார். அதில் வெற்றிக்கு மேல் வெற்றி கண்டார்.

ஒரு காலத்தில் வளர்ந்து, விரிந்து, பரந்திருந்த தமிழ் நாடகம் இடைக்காலத்தில் ஒருக்கால் எமது தமிழ் மண்ணில் வாடி, வதங்கி, சுருங்கி வந்த போதில் நடிகமணி வி. வி. வைரமுத்து அவர்கள் நாடகத்துறையில் ஏறு நடை போடத் தொடங்கினர்.

கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் நடிகமணியின் இசையில், அரங்க நடிப்பில் கவர்ந்து இழுக்கப்பட்டவர். அந்த முது பெரும் கலைஞனின் வாய் எப்பொழுதும் நடிகமணியின் புகழ் பேசிக் கொண்டேயிருந்தது. ஒரு கலைஞன் இன்னொரு கலைஞனைப் போற்றிப் பேசுவது அபூர்வம். ஆனால் நடிகமணி வைரமுத்து அவர்களோ எல்லாக் கலைஞர்களாலும் போற்றப்பட்டவர்; புகழ் சேர்க்கப்பட்டவர்.

அவர் மேடை ஏறிய ஆரம்பகால நாடகங்களில் ஒலி பெருக்கி இல்லை. ஒளி விளக்குகள் இல்லை. காட்சி சோடனைகள் கூடக் குறைவு. ஆனால் ஆயிரக் கணக்கான பார்வையாளர்கள் தாராளமான வகையிலே அவர்கள் பேச்சைக் கேட்க முடிந்தது. நடிகமணியின் பாட்டுக்கள் கோடை இடிகளாயிருக்கும். குரல் வளம் அவரைக் கை கொடுத்துத் தூக்கி வைத்தது.

இன்றைய நாடகங்களில் சிலருக்குப் பாட்டு இரவல், சிலருக்குப் பேசும் குரல் இரவல், இன்னும் சிலருக்கு நடிப்புக் கூட இரவல்தான்! அவை எல்லாம் இன்றைய நவீனச் சினிமாப் பாணியில் அமைந்திருப்பன. இந்த நிலையில் நாடகக் கலை உருப்படியாக வளருமா என்பதைச் சிந்தித்துப் பார்ப்பார்

களா? அதற்கு உயிர் வேண்டும். உணர்வு வேண்டும். எல்லாம் சொந்தத்தில் இருக்க வேண்டும். அப்பொழுது தான் நாடகக் கலைக்கு உய்வுண்டு. அது வாழவும் முடியும்! நாடக உலகில் நடிகமணி வைரமுத்து அவர்களின் வழியைப் பின்பற்றினல் நாடகம் வளரும். நடிகர்களும் வாழுவார்கள்!

நடிகமணி வைரமுத்து அவர்களின் பாட்டுக்கள் நெறிமுறை சார்ந்த கர்நாடக இசை! நடிப்புத் தன் சொந்தப்பாணி. பேச்சு இயற் தமிழ்! மொத்தத்தில் இயல், இசை, நாடகம் சேர்ந்ததே முத்தமிழ் ஆகும். நடிகமணி ஒரு முத்தமிழ் வித்தகனாக விளங்கினர்.

நாடகம் தோன்றியதன் காரணம் மக்களை நல்வழிப் படுத்துவதற்காகும். பலமுறை ஒன்றைப் படித்துத் தெரிந்துகொள்வதிலும் பார்க்க ஒருமுறை வாயால் சொல்லக்கேட்டால் எளிதில் புரிந்துகொள்ளலாம். இப்படிப் பலமுறை சொல்லிக் கேட்பதிலும் பார்க்க ஒருமுறை பேசி, நடித்துக் காண்பித்தால் மிக எளிதாகப் புரிந்துகொள்வதுடன், வாழ்நாளில் மறக்காமலும் இருக்கமுடிகிறது. இதற்காகத்தான் நாடகங்கள் உருவாகின.

இந்த அடிப்படையில் உருவாகிய நாடகங்களில் ஒன்றுதான் அரிச்சந்திரா. இப்பழைய கொட்டகைக் கூத்துக்குப் புத்துயிர் அளித்து வந்தவர் நடிகமணி வைரமுத்து அவர்கள். "மயான காண்டம்" என்னும் பெயரில் இந்நாடகத்தை இரண்டாயிரம் தடவைகளுக்கு மேலாக மேடை ஏற்றினுர் என்றல் அதன் சிறப்புச் சொல்லுந்தரமுடையதா?

பழம்பெரும் பண்புகளை வளர்க்கும் "நந்தனர்" நாடகமும் இவரால் பலமுறைகள் மேடையேற்றப்பட்டன. "சத்திவான் சாவித்திரி", "சாரங்கதாரா", பறங்கியர் காலத்து தமிழ் மண்ணின் வரலாறு கூறும "பூதத்தம்பி", கத்தோலிக்க மதத்துப் பெருமை கூறும் "ஞானசௌந்தரி", நாடு போற்றும் "நல்லதங்காள்" இவைகள் எல்லாம் நடிகமணியின் நடிப்புயர்வால் மீண்டும் மீண்டும் மேடையேற்றப்பட்ட நாடகங்கள்.

1961-ல் கொழும்புமாநகரில் கலைக்கழக நாடகக் குழுவினரால் நடாத்தப்பட்ட நாடக விழாவிலே நடிகமணி வைரமுத்து அவர்களின் "நந்தனர்" நாடகம் நடைபெற்றது. இந்த நாடகத்தைப்பற்றி அன்று விமர்ச்சித்த, ஆய்வுசெய்த, மதிப்புரை வழங்கிய அறிஞர்கள் பலர்.

'நந்தனுர்' அண்ணவி மரபு நாடகம் என்றனர் சிலர். 'அண்ணவி மரபு நாடகமானல் ஒரு அண்ணவியார் முன் நின்று தாளம்போட, அதனேடு சேர்ந்து ஆடிப்பாடி நடிப்பதுதான் அண்ணவி மரபு நாடகம்' என்றனர் இன்னும் சிலர்.

'நந்தனார் அண்ணாவி மரபு நாடகமல்ல! ஓர் இசை நாடகம்' என்றனர் வேறுசிலர்.

"இசை நாடகம்என்று சொல்வதனால் முழுக்கமுழுக்க இசையினூடேயே நாடகம் இருக்கவேண்டும். இன்று நடைபெறும் மற்றைய நாடகங்களும் இடையிடையே இசையோடு வசனமும் சேர்ந்து இருப்பதனால் அவைகளையும் இசை நாடகங்கள் என்று கூறலாமல்லவா? எனவே, நந்தனார் அண்ணாவிமரபு நாடகம் அல்ல! இசை நாடகமும் அல்ல! அது ஒரு கொட்டகைக் கூத்து" என்றனர் இன்னும் சிலர்.

இப்படி அந்த நாட்களிலேயே நடிகமணியின் 'நந்தனார்' பலவிதமான ஆய்வுகளை அறிஞர்கள் செய்ய அடிகோலி வைத்துள்ளது.

புராண, இதிகாச, வரலாற்று நாடகங்களை மட்டும் மேடையேற்றவில்லை நடிகமணி. 'பாசம்' என்ற சமூக நாடகத்திலும் நடித்துப் புகழ்பெற்றவர் அவர். பகுதிநேரக் கலைஞனாக நாடகங்களை நடத்தவில்லை நடிகமணி. அன்னாருக்குத் தொழில் இசையும் நாடகமுமே! முழுநேர நாடகக் கலைஞன் நடிகமணி வி. வி. வைரமுத்து அவர்கள்.

'பிறப்பது மண்மேல் இறப்பதற்கெனறே' என அரிச்சந்திரனாகப் பாடிய நடிகமணி, தன் இறப்புக்கு முன்னும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கும், ரூபவாஹினி தொலைக்காட்சிக்கும் நிகழ்ச்சிகள் கொடுப்பதற்காகத் தலைநகர் கொழும்புக்கு வந்தார். நிகழ்ச்சிகள் கொடுத்தார். ஆனால் அவர் உயிரோடு வீடு திரும்பவில்லை. 08-07-1989இல் காலன் அவர் உயிரைக் கொழும்பில் வைத்தே பறித்துவிட்டான். வெறும் பிணமாக அவர் உடல் வீடு சேர்ந்தது.

நடிகமணியின் மரணச் செய்தியை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபணச் செய்தியில் கேட்டபோது மக்கள் திடுக்குற்றனர். அழுதனர். "இனி ஓர் அரிச்சந்திரனை எப்போது காணப்போகிறோம்" என்று அழுதவர்கள் எண்ணில் அடங்காதவர்கள்.

நாடக உலகில் பல்கலையிலும் பயிற்சிபெற்ற நடிகமணி வி. வி. வைரமுத்து அவர்களுக்கு வீட்டிலே அஞ்சலிக்கூட்டம் நிகழ்ந்தது. சட்டத்தரணி குமரகுரு அவர்கள் தலைமை தாங்கினார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் அஞ்சலியுரை செலுத்தினர்.

"மறைந்த நடிகமணி வைரமுத்து ஒரு வரலாற்று நாயகன். அவர் நாடகத்துறைக்கு ஆற்றிய பணிகள் ஆய்வுசெய்யப்படவேண்டும். எமது எதிர்காலச் சந்ததி அவரைப்பற்றி அறிந்துகொள்ள நாம் வசதிசெய்ய வேண்டியது அவசியம்" என இரங்கல் உரையில் அழுத்திச் சொன்னவர் விரிவுரையாளர் சண்முகலிங்கம் அவர்கள்.

"நடிகமணி சாதாரண மனிதனுக வாழ்ந்து மறையவில்லை. மக்கள் பாரம்பரியத்தின் சின்னமாகவும் எமது கலைச்செழுமைகளின் எடுத்துக்காட்டாகவும் விளங்கியவர். இசையையும் நாடகத்தையும் ஒன்றுசேரக் கையாண்டு அதன்மூலம் சிறந்த கலைஞனுக விளங்கினுர் நடிகமணி வைரமுத்து" என அஞ்சலி செய்தவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள்.

"நடிகமணி புராண நாடக மரபைக் கட்டி வளர்த்தவர். தனக்காக மட்டும் வாழாமல் சமூகத்தின் காப்பாக, நாடகக் களமாக, நாடகத்துக்காக வாழ்ந்தார்" என விரிவுரையாளர் கனக சபாபதி நாகேஸ்வரன் அவர்கள் தமது அஞ்சலி உரையில் குறிப்பிட்டார்.

"எளிமையான வாழ்வும், அன்புடன் பழகும் நற்பண்பும் நடிகமணியின் சிறப்பியல்புகள். எமது இளம் தலை முறையினர் கற்பதற்கு அநேக பண்புகள் அவரிடம் விளங்கின. அவரைப்பற்றி அறிவதற்கு வழி ஏற்படுத்திக் கொடுக்கத் திட்டம் இட்டுள்ளோம்" என நம்பிக்கையுரை தந்தவர் நுண்கலை விரிவுரையாளர் சி. மௌன குரு அவர்கள்.

"நடிகமணி தான்பிறந்த காங்கேசன்துறை மண்ணுக்கு மட்டுமல்லாமல் இந்த இலங்கைத்தீவு முழுவதுக்குமே இசையினுலும், நாடகத்தினுலும் பெருமைதேடித் தந்தவர். அவர் நாடக உலகில் ஏற்றிவைத்த 'நந்தா விளக்கு' இனிமேல் சுடர்விட்டுப் பிரகாசிக்கப் போகிறது" என உறுதியாக உரைசெய்தவர் கலைப் பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை அவர்கள்.

நடிகமணி வைரமுத்து அவர்களின் நாடகங்கள் பல்கலைக்கழக மட்டத்தில் மட்டும் பிரசித்தம் பெற்றவைகள் அல்ல. கற்றறிந்த அறிஞர்களால் சொல்லப்படுகின்றவை! கனதியானவை! காத்திரமானவை! கணிக்கப்படக் கூடியவை!

நடிகமணியின் நாடகங்கள் இலங்கைத்தீவின் பட்டி தொட்டிகளிலும், நாடு நகரங்களிலும் மேடை ஏற்றப்பட்டன. பல்லாயிரக்கணக்கான மக்கள் கூட்டம் அவரின் நாடகங்களைத் திரும்பத் திரும்பப் பார்த்து மகிழ்ந்தனர். குப்பை மேட்டிலிருந்து கோபுர உச்சிவரை நடிகமணிக்கு ரசிகர்கள் இருந்தனர்.

காலஞ்சென்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்களும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நாடகத் தயாரிப்பாளர்களின் சானு, கே. எம். வாசகர் ஆகியோர் நடிகமணியின் நடிப்பை நன்குணர்ந்து புரிந்தவர்கள். வேகமாக வளர்ந்து வரும் அறிவியலை ஒட்டி நாடகங்களைத் தயாரிக்க ஊக்கமும் உற்சாகமும் கொடுத்து நாடக உலகில் நடிகமணி வைரமுத்து அவர்களை அணையாத விளக்காக எரிய வைத்தார்கள்.

இசைஞானம் கொண்ட இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ப்பகுதிக் கட்டுப்பாட்டு அதிகாரியாக இருந்த திரு. வீ. ஏ. சிவஞானம் அவர்கள் நடிகமணியின் இசையைக் கொண்டு பழைய நாடக மேடைப் பாடல்களை ஒலிப்பதிவாக்கி வானொலியில் கானமழை பொழியக் கேட்கச்செய்திருக்கும் பெருமை அவருக்கு உரியது.

அன்றைய நாடகங்கள் விடிய விடிய நடைபெற்றன காலத்தைச் சுருக்கிக் காரியத்தில் ஈடுபடும் இன்றைய மக்களுக்கு ஏற்ற விதத்தில் எடுத்த கருவையும், கொண்ட குறிக்கோளையும் சுருக்கிப் பழைய நாடகங்களைப் புதுப் பொலிவோடு நடத்தியவர் நடிகமணி. அவர் ஓர் இசைக்கலைஞர். நடிக நம்பி. எந்தவகை இசைக் கருவிகளையும் கையாளும் வாத்தியக் கலைஞன்.

நான் முதன்முதலில் வி. வி. வைரமுத்து அவர்களை ஒரு பெண் பாத்திரமாகவே மேடையில் கண்டேன். 'மோகனாங்கி'யாக நடித்தார். அந்தப் பெண்ணாக அவர் ஆடிய நர்த்தனம் இன்றும் என் மனத் திரையில் மறையாமல் தெரிகிறது.

மேடையில் நின்று முழக்கமிடும் நடிகமணி எந்த மயானத்தைக் காத்தாரோ அதே மயானத்தில் அவரும் இன்று சங்கமமாகிவிட்டார். 'காற்பணமும், முழத்துண்டும்' கேட்பதற்கு நடிகமணி இனி இல்லை! நாடக உலகின் ஒளிவிளக்கு நடிகமணி மறைந்துவிட்டார்.

நாடக உலகில் இருந்து ஒரு நடிகமணி மறைந்துவிட்டாலும், அந்த நடிகமணி நாடகக் கலைக்கும், இசைக் கலைக்கும் ஏற்றி வைத்த தூண்டாமணி விளக்கு என்றும் அணையாது எரிந்து கொண்டிருக்கும்.

"நீ நடந்து காட்டினாய்! அரங்கம் அதிர்ந்தது!

நீ நடித்துக் காட்டினாய்! சிரங்கள் அசைந்தன!

இசைக்குயிலே ...... எங்கே நீ போனாய்?

ஏன் இன்று பொய்யானாய்?"

நடிகமணி பிறந்து, தவழ்ந்து, ஓடி, ஆடி, விளையாடித் திரிந்த காங்கேசன்துறை மண்ணின் மக்கள் நடிகமணிக்காக விட்ட கண்ணீர் துளிகள் இவை!

இசையால் புகழ் பரப்பி, நடிப்பால் நெடிதுயர்ந்து, உள்ளத்தால் பொய்யாது, பண்பிலே பாலகன்போல் பலரோடும் இணைந்து வாழ்ந்து வந்த "நடிகமணி' வி. வி. வைரமுத்து அவர்கள் இனி என்றென்றும் தமிழ் மக்கள் உள்ளங்களில் நீங்காது இருப்பார் என்பது உறுதி.

* * *

# நிவாரணமும் புனர் வாழ்வும்

**யாழ். மனித முன்னேற்றத்தின் புனர்வாழ்வுப் பணியின் சுருக்கமான கண்ணோட்டம்.**

## புலம் பெயர்வு

இலங்கையில் 1958ம் ஆண்டுக்குப்பின் ஏற்பட்ட பல இனக் கலவரங்கள் காரணமாக பாதிப்புற்றோர் தொகை படிப்படியாக அதிகரித்து வந்துள்ளது தமிழர் சிறுபான்மையாக உள்ள தென் பகுதிகளில் வாழும் மக்களே முதலில் பாதிப்புக்குள்ளாயினர். மத்திய மலைநாட்டில் வாழும் இந்திய வம்சா வழியினர் பலர் தமக்கு ஆபத்து நேர்ந்தபோது வடக்கிலுள்ள பாதுகாப்பான பகுதிகளுக்கு இடம் பெயர்ந்தனர். அங்கு அவர்கள் வீடு வாசல் தொழில்துறை, பாதுகாப்பு எதுவுமின்றி அல்லற்பட்டனர் ஏனெனில் வடக்கில் இவர்களுக்கு உறவினர்களோ வேறு தொடர்புகளோ இல்லை. ஆகவே வடக்கில் உள்ள மக்கள் அவர்களுக்குக் கை கொடுத்துதவ வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

ஆனால் வடக்கிலும் பூரண பாதுகாப்பு இருந்ததென்று சொல்ல முடியாது. இங்கு மிங்கும் பல இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டிருந்தன. இராணுவத்தினருக்கு அழிவுகள் நேரும்போதெல்லாம் பழிவாங்கும் நடவடிக்கையாக பொதுமக்களின் உயிருக்கும் பொருளுக்கும் சேதம் விளைக்கப்பட்டது.

ஈற்றில் 1983ல் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்செயல்களின் விளைவாக ஆயிரக்கணக்கானோரின் உயிருக்கும் பொருள்பண்டங்களுக்கும் அழிவு ஏற்பட்டதைத் தொடர்ந்து 18215 தமிழர் கடல் மார்க்கமாக காங்கேசன்துறைக்குக் கொண்டுவரப்பட்டனர். விமானமூலமும், புகையிரத மார்க்கமாகவும், நெடுஞ்சாலை வழியாகவும் அகதிகள் வந்தவண்ணமிருந்தனர். காங்கேசன்துறைமுகத்தில் ஏனைய தொண்டர் ஸ்தாபனங்களுடன் எமது தொண்டர் 25 பேர் கடுமையாக உழைத்தனர். ஊரடங்கு, இராணுவ நடமாட்டம் போன்ற இடையூறுகளின் மத்தியில் காங்கேசன்துறையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு போக்குவரத்து வசதிகளைச் செய்ய வேண்டியிருந்தது.

## கிளிநொச்சி

1983 ஆகஸ்ட் 13 தொடக்கம் இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து கிளிநொச்சிக்கு அகதிகள் வந்தவண்ணமிருந்தனர். இவர்கள் புனித திரேசா ஆலயத்துக்கு வந்ததும், நாம் எல்லாச் சமயத் தலைவர்களுடனும், கழகங்கள் சங்கங்களுடனும், கிளிநொச்சி

பாராளுமன்ற உறுப்பினர், யாழ். அரசாங்க அதிபர் ஆகியோருடனும் தொடர்பு கொண்டோம். 1977ல் இத்தகைய பிரச்சினையில் அனுபவப்பட்டிருந்த கிளிநொச்சி மக்கள் இவர்களுக்கு உதவ முன் வந்தனர்.

அகதிகள் தொகை அதிகரித்தமையால் வேறு பல முகாம்களை அமைத்து வேறு தொண்டர் ஸ்தாபனங்களிடம் ஒப்படைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. அவை பின்வருமாறு:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | புனித திரேசா அகதிகள் நல்வாழ்வு நிலையம் | 119 | குடும்பங்கள் | 478 | பேர் |
| 2. | கரடிப்போக்கு (ரேட்டறி கழகம்) | 85 | ,, | 315 | ,, |
| 3. | கனகாம்பிகை (இளம்பறவைகள் விளையாட்டுக் கழகம்) | 79 | ,, | 320 | ,, |
| 4. | வட்டக்கச்சி ஆலயம் (நிஸ்கோ) | 30 | ,, | 106 | ,, |
| 5. | கருணைநிலையம் (லயன்ஸ் கழகம்) | 41 | ,, | 157 | ,, |
| 6. | குருகுலம் | 18 | ,, | 96 | ,, |
| 7. | காந்திசேவா நிலையம், உருத்திரபுரம் | 33 | ,, | 127 | ,, |

கிளிநொச்சியை வந்தடைந்த அகதிகளுட் பலர் யாழ்ப்பாணம், மடு, முல்லைத்தீவு, வவுனிக்குளம், மல்லாவி, ஒட்டிசுட்டான் முதலிய இடங்களுக்கும் அனுப்பப்பட்டனர்.

1983 அக்டோபர் 2ல் அகதிகள் நிலை பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | புனித திரேசாள் ஆலயம் — அந்தோனியார் கோயில் | 127/415 |
| 2. | ,, ,, அமைதிபுரம் | 30/128 |
| 3. | ,, ,, ஆரோக்கியநகர் | 38/183 |
| 4. | கென்ற், டொலர் | 87/358 |
| 5. | கனகாம்பிகைகுளம் | 180/785 |
| 6. | கரடிப்போக்கு | 121/466 |
| 7. | வட்டக்கச்சி | 68/271 |
| 8. | கருணைநிலையம் | 69/327 |
| 9. | குருகுலம் | 141/506 |
| 10. | அக்கராயன் | 130/489 |
| 11. | காந்திசேவா நிலையம் | 95/366 |
| 12. | பொன்னகர் | 84/336 |
| 13. | யா/மாதகல் | 32/134 |
| 14. | யா/பண்ணை | 73/212 |
| 15. | யா/குருநகர் | 110/384 |
| 16. | யா/கைதடி | 242/601 |

| | | |
|---|---|---|
| 17. | யா/புங்குடுதீவு | 63/194 |
| 18. | Mn/ஜோ. க. ஆலயம் | 83/342 |
| 19. | Mn/தமுழு முனை | 28/98 |
| 20. | Mn/இந்துக் கோயில் | 40/136 |
| 21. | புதுக்குடியிருப்பு | 23/77 |
| 22. | புதுக்குடியிருப்பு சர்வோதய | 37/127 |

இவற்றில் 1, 2, 3, 4, 12, 13, 18 இலக்க முகாம்கள் யாழ் மறைவட்ட மனித முன்னேற்ற நிலையத்தின் ஆதரவில் இயங்கி வந்தன. 1 — 12 இலக்க முகாம்கள் கிளிநொச்சியில் இருந்ததாலும், அந்த அகதிகள் புனித திரேசா ஆலயத்தின் மூலமே பிற இடங்களுக்கு அனுப்பப்பட்டதாலும் மனித முன்னேற்ற நிலையம் அவர்களுக்குப் பலவித உதவிகளைச் செய்யக் கூடியதாயிருந்தது. அகதிகள் நல நிலையத்திற்கு அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட அதிகாரியும் புனித திரேசா ஆலயத்தை தனது அலுவலகமாக பயன்படுத்த வசதிசெய்து கொடுக்கப்பட்டது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், றெட்பானா, நோர்வே N. P RA. , அமெரிக்கா I. H. A. P. போன்ற ஸ்தாபனங்கள் அகதிகளின் நிவாரணத்துக்கு உணவு, உடை, வைத்திய உதவி முதலியவற்றை அளிப்பதில் முன்னின்று உதவின. அரசாங்கத்தின் நிவாரணப் பணமும் அரச அதிகாரிகள் மூலம் அகதிகளுக்கு அளிக்கப்பட்டது. வீடு திரும்ப விரும்பியோருக்கு ஓர் உதவித் தொகையும் பிரயாணச் செலவும் கொடுக்கப்பட்டன. இவர்களுட் சிலர் கிளிநொச்சியிலேயே குடியமர்ந்து விட்டனர். கிளிநொச்சிக்கும், முறிகண்டிக்குமிடையே குடியேறியிருப்போர் பெரும்பாலும் 1958, 1977, 198. ஆண்டுக் கலவரங்களில் அகதிகளாக வந்தவர்களே.

இவர்கள் படிப்படியாகத் தற்காலிக இருப்பிடங்களை அமைத்துக்கொண்டனர். சிலர் வருவாய்க்காக உழைக்கத் தொடங்கினர். வேறு சிலர் நிவாரணத்தையும் நிதியுதவிகளையும் பெறுவதே நோக்காக இருந்தனர். ஒரு குடியேற்றத் திட்டத்தின் வெற்றி பொருத்தமான ஆட்களைக் குடியமர்த்துவதில் தங்கியிருக்கிறது. வன்முறைகளுக்கஞ்சி வந்த இந்த அகதிகள் தகுதி நோக்கித் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் அல்லர். ஆகவே புதியதோர் இடத்தில் வேரூன்றி, புதிய முறையில் வாழ்க்கையை அமைத்துக் கொள்வது அவர்களுக்குக் கடினமாயிருந்தது. எனவேதான் அவர்களோடு வாழ்ந்து அவர்களுக்கு வழிகாட்டக்கூடிய துறவற, பொதுநிலைத் தொண்டர்கள் தேவைப்படுகின்றனர்.

அகதிகள் புனர்வாழ்வு அமைச்சைச் சேர்ந்த திரு. A. W. H. பெரேராவுக்கும், கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. ஜெயநாதனுக்கும் இடையில் நடந்த சந்திப்பின் பலனாக 1000 அகதிகளை கிளிநொச்சி மாவட்டத்தில் குடியமர்த்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

யாழ் மனித முன்னேற்ற நிலையம் பின்வரும் கிராமங்களின் புனர்வாழ்வுக்குத் துணைபுரிந்துள்ளது. தேவன்குளம் I, II, ஆரோக்கிய நகர், வட்டக்கச்சி, கனகாம்பிகைகுளம், தியோகுநகர் முல்லைத்தீவு, வாழ்வகம் சேந்தாங்குளம், உருத்திரபுரம்

## தேவன்குளம் I

மன்னார் மாவட்டத்தில் குடியமர்த்தப்படவிருந்த அகதிகள் அரசாங்கத்தால் கிளிநொச்சிக்கு அனுப்பப்பட்டனர். மன்னாரில் அவர்களது அகதிமுகாமே தீக்கிரையாக்கப்பட்டு அனைத்தையும் இழந்துவிட்டபடியால் நாமே அவர்களது அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்திசெய்யவேண்டியிருந்தது. முதலில் அவர்களுக்கு அளிக்கப்பட்ட நிலத்தில் காடு வெட்டி தற்காலிக குடியிருப்புகளை அமைப்பதற்கு ஆண்கள் மட்டும் அங்கு கொண்டுபோகப்பட்டனர். நான்கு மாத கடின உழைப்பின்பின் அவர்களது குடும்பங்கள் முகாம்களிலிருந்து அங்கு வந்து வசிக்கக் கூடியதாயிருந்தது. காடுவெட்டி தமது காணிகளுக்கு வேலிகளை அமைத்தபின் விவசாயத்துக்கு நீர் பெறுவதற்காக கிணறுகளும் தோண்டவேண்டியிருந்தது. பாதைகள், கடை, சனசமூகநிலையம் ஆகியனவும் அமைப்பது அவசியமாயிற்று. 62 குடும்பங்களைக் கொண்ட இத்திட்டத்தில் துறவிகளும் பொதுநிலையினருமான எமது தொண்டர்கள் திட்டமிடுதல், கணக்கு வைத்தல், வைத்திய சேவை, கல்வி கற்பித்தல் போன்ற பல விதமான உதவிகளைப் புரிந்து வருகின்றனர். அடர்ந்த காட்டின் நடுவில், ஏழைகளுக்கு பணி செய்வதற்காக கஷ்டங்களை எதிர் கொள்ளுகின்றனர்.

## தேவன்குளம் II

இதுவும் மேற்கூறப்பட்டது போன்றதே. இங்குள்ள 98 குடும்பங்களில் 62 மன்னாரிலிருந்தும் ஏனையோர் பிற இடங்களிலிருந்தும் வந்தவர்கள். இங்கு ஒரு பாடசாலை, களஞ்சிய அறை, தொண்டர் விடுதி ஆகியன தேவைப்படுகின்றன. ஒரு வழிபாட்டுஸ்தலமும் அமைத்தால் நலமாக இருக்கும்.

## ஆரோக்கியநகர்

ஆரோக்கியநகர்

இவ்விடத்தில் பலரின் நன்கொடைகளைப் பெற்று அஸ்பெஸ்டோஸ், ஓடு அல்லது கூரைகளுடன் கூடிய 40 நிரந்தர வீடுகளை அமைக்கக்கூடியதாயிருந்தது. அன்றாட தேவைகளுக்கும், வீட்டுத் தோட்டச்செய்கைக்கும் நீர் தேவைப்படுகின்றது. இதற்காக நான்கு கிணறுகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன.

சிறுரின் கல்விக்காக அமைக்கப்பட்ட பாடசாலையில் 83 சிறுவர் கல்வி பயில்கின்றனர் இரு ஆசிரியர்களே உள்ளனர். எமது சொந்த நிதியைக்கொண்டு இதைத் தொடர்ந்து நடத்துவது சிரமமாயிருந்தாலும் இம்மக்களை எதிர்காலத்துக்குத் தயார் செய்யக் கூடியது கல்வியொன்றே.

இங்குள்ள சனசமூக நிலையம் மக்களுக்கு ஒரு பெரும் வரப்பிரசாதமாகும். எமது கூட்டங்களை அங்கு நடத்தக்கூடியதாயிருப்பதுடன், அங்கு வருகை தரும் வைத்தியரும் பிறரும் இதைப் பயன்படுத்துகின்றனர். அங்குள்ள கறுப்பு — வெள்ளை தொலைக்காட்சிப் பெட்டி மக்கள் அறிவு வளர்ச்சிக்கு உதவுகின்றது. மக்களுக்கு பணி செய்ய வரும் கன்னியர் சிறுவருக்கு கைவேலைகளைக் கற்றுக்கொடுக்கக் கூடியதாயிருக்கிறது.

இங்கு நிரந்தரமாக உள்ளவர்களைவிட வேறு அகதிகளும் இங்கு அடிக்கடி வந்து சேர்வதுண்டு. அவர்களுக்கு பாடசாலை, சனசமூக நிலையம், பட்டறை ஆகியவற்றிலேயே இடமளிக்க வேண்டியிருக்கிறது. 1986ல் கிளிநொச்சியில் ஏற்பட்ட வன்செயல் காரணமாக 85 குடும்பங்களுக்கு நாம் உணவும் இருப்பிடமும் அளிக்க வேண்டியிருந்தது. அதுபோலவே வவுனியாவைச் சேர்ந்த 81 குடும்பங்கள் ஒரு வருடகாலமாக இங்கு தங்கியுள்ளனர். இந்தக் குடும்பங்கள் காரணமாக எமது நிரந்தர வேலை தாமதமாகி விடுகிறது.

பண்ணை வளர்ப்பின் மூலம் வருவாயை பெறும்படிக்கு ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஆடுகள், கோழிகள் கொடுக்கப்பட்டன. நாம் நடத்தும் மாட்டுப்பண்ணை, பன்றிப் பண்ணைகளிலும், பொதுவான காய்கறித் தோட்டத்திலும் சிலர் வேலை செய்கின்றனர். இங்குள்ள களிமண்ணைக்கொண்டு கோடைகாலத்தில் செங்கற்களை வைக்கக் கூடியதாயிருந்தது. மாரிகாலத்தில் அயலிலுள்ள கிராமங்களில் வயல் வேலைக்கு செல்கின்றனர். இது அவர்களுக்கும் கிராமவாசிகளுக்கும் நல்லுறவை ஏற்படுத்தி ஈற்றில் அவர்களை ஒன்று இணைக்க வழி செய்யும்.

எமது நடமாடும் வைத்தியசேவை எல்லாக் குடியேற்றங்களுக்கும் சென்று வைத்திய உதவி செய்து வருகிறது.

**வட்டக்கச்சி**

50 குடும்பங்களைக் குடியமர்த்துவதற்குப் போதிய நிலம் ஒரே யிடத்தில் கிடைக்காததால் இவர்கள் பிற கிராமங்களுக்கு அண்மையில் குடியமர்த்தப்பட்டனர். ஐந்து குடும்பங்களுக்கு சீமேந்துச் சுவர்களும் அஸ்பெஸ்டோஸ் கூரையுமுள்ள நான்கு வீடுகள் கட்டப்பட்டன. பதின்மூன்று குடும்பங்களுக்கு வட்டக்கச்சியிலேயே ஓரளவு நிரந்தரமான வீடுகளும், ஏனைய குடும்பங்களுக்கு பல்வேறு இடங்களில் தற்காலிக வீடுகளுக்கும் அஸ்பெஸ்டோஸ் கூரைகள் கொடுக்கப்பட்டன. தமக்கென ஒரு வீடு கிடைத்தவுடன் இவர்கள் சுதந்திர உணர்வுடன் வாழ்வதைக் காண முடிந்தது.

இவர்களுடைய தேவைக்காக மூன்று கிணறுகளே எம்மால் அமைக்க முடிந்தது. இவர்களுக்கு சமையற்பாத்திரங்கள், தொழில் செய்வதற்கான கருவிகள், உடைகள், நிவாரணப்பணம் ஆகியன அளிக்கப்பட்டன. எம்மில் தங்கியிராது சுயமாக அவர்கள் உழைப்பதை ஊக்குவிக்கும் பொருட்டு சில காலத்தின்பின் நிவாரணபபணம் நிறுத்தப்பட்டு தோட்டச்செய்கை, கோழிவளர்ப்பு போன்றவற்றை மேற்கொள்ள உதவியளிக்கப்பபட்டது. ஓரிடத்தில் மெழுகுதிரி வார்க்கும் தொழிலையும் அறிமுகப்படுத்தினோம். தொழில் வாய்ப்புகள் கிடைக்காவிட்டால் இம்மக்கள் பிற இடங்களுக்கு செல்ல முயல்வர். ஆனால் அவ்விடங்களை நிரப்ப வேறு அகதிகள் வந்து சேர்வர். சொல்லப்போனால் கிளிநொச்சிப்பகுதி குடியேற்றத்துக்குப் பெரிதும் விரும்பப்படுகிறது. இங்கு பல அரசாங்க குடியேற்றத்திட்டங்கள் உள்ளமையும் இப்பகுதி பாதுகாப்பானதெனக் கருதப்படுவதும், முன்னரே வந்த மலையக அகதிகள் பலர் இங்கு குடியேறியுள்ளமையும் இதற்குக் காரணமாகலாம். அத்துடன் சாதி சமயப் பூசல்கள் பிற தமிழ்ப் பிரதேசங்களைவிட இங்கு குறைவாகவே உள்ளன.

**கனகாம்பிகை குளம்**

கனகாம்பிகை குள முகாமில் தங்யிருந்த அகதிகளுட் பலர் கிராமங்களில் வேலைபெற முடிந்தது. காணிகளை நன்கொடையாகப் பெற்ற சிலர் காடுதிருத்தும் வேலையின்றியே பயிர்த்தொழிலை ஆரம்பிக்கக் கூடியதாயிருந்தது. அவர்களுக்கு நாம் கருவிகளையும், உணவுப் பொருள்களையும் கொடுத்துதவினோம். மக்கள் குழுக்களாக தத்தம் தலைவரின் கீழ் செயல்பட்டனர். எமது நடுநிலையம் 100 குடும்பங்களை வழிநடத்த இரு தொண்டர்களை நியமிக்கவேண்டியிருந்து. வித்தியாசமான சூழல், தொழில், வாழ்க்கைமுறைகளைக் கொண்ட இம்மக்களை புதிய சூழலுக்கு பழக்கப்படுத்துவது கஷ்டமாகவேயிருந்தது. இவர்கள் பொன்னகர், பாரதிபுரம் என்னும் இரு கிராமங்களில் தற்போது குடியமர்ந்துள்ளனர்.

இவர்களுக்கும் வழக்கமான உதவிகள் செய்யப்பட்டன. ஆனால், இவர்கள் சேமிக்கும் பழக்கம் இல்லாதவர்கள். கசிப்பு அருந்துவதில் விருப்புடையவர்கள். ஆகவே, அவர்களுக்கு அளிக்கப்படும் உதவி சரியாகப் பயன்படுத்தப்படுகிறதா எனக் கவனிக்கவேண்டியிருக்கிறது.

இவர்களுக்கு முதலில் கிடுகுகளாலான தற்காலிக வீடுகள் அமைக்கப்பட்டன. பின் தகரக்கூரைகளைக் கொண்ட மண்வீடுகள் அமைக்கப்பட்டன.

இங்குள்ள சிறுவர்கள் கிராமப்பாடசாலைகளுக்குச் செல்கின்றனர். ஆனால், அவர்கள் நீண்ட தூரம் நடக்க வேண்டியிருக்கிறது. சிறுபிள்ளைகளுக்கு பாலர் பாடசாலைகளை ஆரம்பித்துள்ளோம்.

## நியோகுநகர், முல்லைத்தீவு

முல்லைத்தீவிலுள்ள அகதிகளில் 100 குடும்பங்கள் யாழ். ஆயரினால் நன்கொடையாக அளிக்கப்பட்ட நிலத்தில் குடியேற்றப்பட்டுள்ளனர். ஆண்கள் முதலில் சென்று காடுதிருத்தி, பாதைகள், கிணறுகள், தற்காலிகக் குடில்கள் அமைத்தபின் அவர்கள் அங்கு குடியேறினர். தென்னந்தும்பு, பனந்தும்பு வேலைகளும் பிற கைத்தொழில்களும் விவசாயமும் செய்ய அவர்களுக்கு உதவி செய்யப்பட்டது. கடலுக்கு அருகில் இப்பிரதேசம் இருப்பதால் பலர் மீனவர்களுடன் மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டனர்.

70 நிரந்தர வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. மாடு, கோழி, பன்றி வளர்ப்பும் மேற்கொள்ளப்படுகிறது. தென்னம்பிள்ளைகளும் கொடுக்கப்பட்டன.

## வாழ்வகம், சேந்தாங்குளம்

சேந்தாங்குளத்தில் அகதிகளுக்கென வாங்கப்பட்ட காணியில் இருபது குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். தற்காலிக வீடுகள், கிணறுகள், சனசமூக நிலையம் என்பன அமைக்கப்பட்டன. நிரந்தர வீடமைக்கும் வேலை ஆரம்பமாகியுள்ளது.

## உருத்திரபுரம்

இங்கும் காணிகளை முன் குடியேறியவர்களிடமிருந்து இலவசமாகவோ விலைக்கோ பெறவேண்டியிருந்தது. அகதிகளுக்கு வழக்கமான உதவிகள் அளிக்கப்பட்டதுடன், வருவாயைத் தரக்கூடிய பயிர்க்கன்றுகளும், உணவுப்பொருட்களும் காணி திருத்தும்போது செலவுக்குப் படியும் கொடுக்கப்பட்டது. முகாமிலிருந்தபோது ரூபா 10,000 முகாம் அதிகாரியின் மூலம் அவர்களின் தேவைகளுக்காகக் கொடுக்கப்பட்டது.

தகரக் கூரைகளைக் கொண்ட 50 வீடுகளும் 4 கிணறுகளும் அமைக்கப்பட்டுவிட்டன. முன் வந்தவர்கள் சிலர் இடம்பெயர்ந்து சென்று விடுவதால் பின்வருவோர் அவர்களது இடங்களை எடுக்கின்றனர். யார் நிரந்தரமாகத் தங்கக்கூடியவர்கள் என்று பார்த்து உதவுவதற்கு இன்னும் காலம் செல்ல வேண்டும். குழந்தை யேசு கிராமம் என்னும் புதுக் கிராமம் பொன்னகருக்கும் பாரதிபுரத்துக்கும் இடையில் உள்ளது.

நாம் முதலிலேயே அகதிப்பிள்ளைகளுக்காக ஓர் பாடசாலையை அமைத்திருந்தோம். இப்பாடசாலை இருந்தமை அகதிகளை இந்த குடியேற்றுவதற்கு வசதியாயிருந்தது. இங்கு 5ம் வகுப்புவரை 174 சிறுவர் படித்துவருகிறார்கள். இப்பாடசாலையை அரசாங்கம் எடுத்தால் பிள்ளைகளுக்கு கூடிய வசதிகள் கிடைக்கும்.

இந்தப் புனர்வாழ்வு நிலையத்துக்கு ஒரு விசேட பிரச்சனை உண்டு. இது பிரதான நெடுஞ்சாலையில் அமைந்துள்ளதால், அதன் வழியே இராணுவ நடமாட்டம் அதிகமாக இருக்கின்றது. மோதல்கள் ஏற்படும் போது அவற்றின் பிரதிவிளைவுகளை இவர்களே அனுபவிக்க வேண்டியிருக்கிறது.

**மாங்குளம் 41 ஏக்கர்**

பழைய கல் குவாறி, புதிய கல் குவாறி என்பன எம்மால் நிர்வகிக்கப்படும் 41 ஏக்கர் பண்ணையாகும். மாதகலிலிருந்து திரும்பி வந்தோர் உட்பட 30 குடும்பங்கள் இங்கு உள்ளன. ஓரளவு நிரந்தரமான வீடுகளும் 7 கிணறுகளும் அமைக்கப்பட்டுள்ளன.

**தேரன் கண்டல்**

143 குடும்பங்கள் புனர்வாழ்வுக்கு தயார் செய்யப்படுகின்றனர். ஒரு பாடசாலை ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளது. கிடுகுக் குடிசைகளை நிரந்தர இல்லிடங்களாக மாற்ற வேண்டியுள்ளது. கிணறுகள் தோண்டி, ஆட்டுப்பட்டிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நிலைமை சீரானால் இது மாங்குளத்திலுள்ள ஒரு பிரதான குடியேற்றமாகும்.

**வவுனிக்குளம்**

ஒரு பாலர் பாடசாலை, தையல் வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கிணறுகளையும் தோண்டியுள்ளோம்.

**வாரணி**

புதுக்குடியிருப்பில் 50 குடும்பங்களுக்கு ஒரு குடியேற்றம் ஆரம்பிக்கப்பட்டது. பல்வேறு காரணங்களால் அங்கு அவர்கள் தொடர்ந்தும் வசிக்க முடியவில்லை.

வசந்தபுரம்

1977 ல் ஆரம்பிக்கப்பட்டது. நிரந்தர வீடுகள், கிணறுகள் அமைக்கப்பட்ட பின்னரே எமது பொறுப்புக்கு வந்தது. ஆண்டு தோறும் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதுண்டு வாழ்வுக் தேவையானவற்றை நாம் கொடுத்து வருகிறோம். ஆனால் நெடுங்கேணி இராணுவ முகாமுக்கு அண்மையில் இருப்பதால் அதிகம் தொடர்பு கொள்ள முடிவதில்லை.

நிவாரணம்

வன்முறைகளும் உள்நாட்டுப் போரும் அதிகரித்து வருவதால் மறைவட்டத்திலுள்ள சகல பங்குக் குருக்களையும் எமது முகவர்களாகக் கொண்டு 57 பிரிவுகளினூடாக செயலாற்றி வருகிறோம். 36 வைத்திய நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. பாதிப்புற்றோர் வருவாய் தரக்கூடிய திட்டங்களில் ஈடுபடுமாறு ஊக்குவிக்கப்படுகின்றனர்.

இவை வெறும் திட்டங்களல்ல, அர்ப்பணமிக்க மனிதாபிமானப் பணிகளாகும். பௌதீக, பொருளாதார அபிவிருத்தி மட்டுமல்ல, சமுதாய முன்னேற்றமும் எமது நோக்கமாகும். குடியேற்றப்பட்ட அகதிகள் ஆரம்பத்திலிருந்தே சுயமுயற்சி உடையவர்களாக தம் மட்டிலும் தம்மைச் சூழ்ந்துள்ள கிராம மக்கள் மட்டிலும் பொறுப்புணர்ச்சி உடையவர்களாக இருக்கும்படிக்கு அவர்கள் வழி நடத்தப்பட வேண்டும்.

| | |
|---|---|
| ★ பசியாயிருக்கிறேன்! | அ |
| ★ தாகமாயிருக்கிறேன் | ப |
| ★ காயமுற்றிருக்கிறேன்! | ய |
| ★ அனாதையாயிருக்கிறேன்! | க் |
| ★ அகதியாயிருக்கிறேன்! | கு |
| ★ சூறையாடப்படுகிறேன்! | ர |
| ★ நோயுற்று இருக்கிறேன்! | ல் |
| ★ சிறையிலிருக்கிறேன்! | க |
| ★ ஆடையின்றியிருக்கிறேன்! | ள் |
| ★ தொழிலற்றிருக்கிறேன்! | |

இன்று நாம் கேட்கும் அபயக்குரல்கள் இவை. துன்புறும் எமது சகோதரரின் இவ்வோலங்கள் எமது வாழ்க்கை முறைக்கே ஓர் அறைகூவலாகவுள்ளன.

# வேதனையே மிஞ்சிவிடும்

தமிழ் செல்வன் மாசில்லாமணி — தெமோதரை

ஒன்றே குலமப்பா — நமக்கு
ஒற்றுமையே பலமப்பா
நன்றே இதைமனதில் — மரமாய்
நாட்டிட வேண்டுமப்பா !

இமயமுதல் குமரிவரை - நமது
முன்னோர்கள் ஆண்டாரென்று
எமக்குள்ளே பேசுவதால் - வெற்றி
எமைவந்து சேராதப்பா !

சாதி சடங்கு என்றும் - பல
சாக்கடை கட்சியென்றும்
மோதி பிளவுபட்டால் - நாம்
மேன்மை அடைவதெப்போ(து) ?

ஓநாய் விடும்கண்ணீர் - என்றும்
உண்மையே இல்லையப்பா !
வீணாய் அதைநம்பி - குழியில்
வீழ்ந்திடல் கூடாதப்பா!

கானப் பறவைகளும் - கொடிய
காட்டு விலங்குகளும்
ஜனத் துடன்பிளவு - காட்டி
எங்கேனும் மாய்ந்திடுதோ ?

ஒன்றுபட்டு நின்றிருந்தால் - உரிமை
ஓடிவந்து ஒன்றிவிடும்
வென்றிருப்போம் வேதனையை - பல
வெற்றிகளை குவித்திருப்போம் !

ஒரிலையில் உணவுண்டு - நாம்
ஒற்றுமையால் வாழாவிட்டால்
வேரில்லை மேன்மைபெற - அன்றேல்
தேவனையே மிஞ்சிவிடும் !

# சமூக விழுமியங்கள்
# பரிமாறப்படும் ஊடகங்கள்

"மனிதன் ஒருவன் பிறக்கின்றபோது அவனுக்கென்று இயல்பாகவே சில குணாதிசயங்களுண்டு. இவற்றைத் தான்தோன்றித்தனமாக வளரவிடாது குடும்பத்திற்கு, குழுமங்களுக்கு, நாட்டுக்கு உலகிற்கு ஏற்ற முறையில் உருவாக்கவேண்டும். மனிதன் சுதந்திரமாகவே பிறக்கின்றான். அதனால் அவனுக்கு உரிமைகளுண்டு என்கின்றனர் அறிஞர்கள் பலர். அப்படியானால் அவன் தான் நினைப்பதையெல்லாம் செய்ய முடியுமா? முடியாது. ஏனெனில் அவன் ஒரு சமூகப்பிராணி. காலாகாலமாக சமூகத்திற்கென சில வரையறைகளுண்டு மனிதன் ஒருவன் சமூகத்திற்கேற்ப, சமூக விழுமியங்களுக்கேற்ப உருவாக்கப்படுதலையே சமூகக்கட்டுப்பாடு (Social Control) என்கிறோம். இதற்கு அவன் இசைந்து வாழாவிட்டால் சமூகத்திற்கு உதவவாதவன் எனக் கணிக்கப்படுகின்றான். குழந்தைகளாயினும், இளைஞர்களாயினும், முதியோராயி எல்லாருக்கும் கட்டுப்பாடுகள் இருக்கின்றன. எந்த நாட்டிலும் தாம் விரும்பியவற்றைச் செய்யும் சுதந்திரம் இல்லை. இச்சமூகக் கட்டுக்கோப்புகள் பூர்வகாலத்தில் வாழ்ந்த பூர்வீக குடிகளிடையேயும் காணப்பட்டு தொடர்கின்றன.

"சமூகக் கட்டுப்பாடுகளின்றி ஒரு மனித உயிரை சமூகமயமாக்க முடியாது. இவ்வரையறைகளானவை சமூக விழுமியங்களுக்கேற்றவாறும், சுதந்திரத்தை மதிப்பதாகவும் இருக்கவேண்டும். இன்று எமது சமூகத்தினைப் பல்வேறு விடயங்கள் தாக்குகின்றன. இவற்றில் ஒன்று நாகரீகம், அடுத்தது தொடர்புச் சாதனங்கள். இவை மட்டில் விழிப்பாக இல்லாது போனால் ஏற்படும் விளைவுகள் மேன்மேலும் நம்மைச் சீரழித்துவிடும்."

"இளம் சந்ததியை உருவாக்குகையில் அவர்கள் மற்றவர்களுக்கும் உலகிற்கும் உரியவர்கள் என்ற பரந்த நோக்கில் உருவாக்கங்கள் அமைய வேண்டும். சுவாமி விவேகானந்தர், நபிகள் நாயகம், யேசு, காந்தி போன்ற பெரிய சிந்தனையாளர்களை நோக்குகையில் இவர்களுடைய சிந்தனைகள் பல மொழிகள், பல நாட்டவர்கள், பல பண்பாட்டை உடையவர்கள் மத்தியில் ஊடுருவுகின்றன. முன்பு உலகினைச் சுற்றி வர வருடக்கணக்குகளானன. இன்றோ சில மணித்தியாலங்களில் பூமியை வலம் வருகின்றனர். எனவே எம் சிந்தனைகள் பரந்திருக்க வேண்டும். இவை குறுகின்றபோதுதான் ஒவ்வாமைகள், விரோதங்கள் தோன்றுகின்றன.

"கட்டுப்பாடுகளில்லையேல் 'கட்டாக்காலிகளை' உருவாக்கி விடுவோம் சமூகக் கட்டுப்பாடானது தன் பிடியைத் தளர்த்திவிட்டதால்தான் இன்றைய குழறுபடிகள் தோன்றின. வேறு பல காரணங்களும் இருக்கலாம்.

"குழந்தை பிறந்தவுடன் ஒரு பாதுகாப்பு தேவைப்படுகிறது. வளரும்போது பெற்றோருடைய அன்பு அக்குழந்தைக்கு அவசியம். பெற்றோருடைய அன்பு கிடைக்கின்றபோது பெற்றோருக்கெதிராகப் பேசக்கூடாது, நடக்கக் கூடாது போன்ற எண்ணங்கள் பதிகின்றன. இவ்வேளை அம் மனப்பதிவுகளை பசளைபோட்டு விருத்தியாக்க வேண்டும். நல்ல சந்தர்ப்பங்களில் விழுமியங்களையிட்டு சல்லாபிக்கவேண்டும். இதுவே சமூகமயமாக்குகின்ற ஒரு நிலை. இதில் பலாத்கார சிந்தனைகள் மிகவும் குறைவு. வாய்க்கால்வழி ஓடுகின்ற தண்ணீரைக் கட்டாவிட்டால் உடைத்து வீணாகிவிடும். வாய்க்காலைச் சீராக்கி நீரை உரிய இடத்திற்குப் பாய்ச்ச வேண்டும். இவைகளை மனதில்கொண்டு ஒரு குழந்தை எனதுடையதாயினும் அயலவருடையதாக இருந்தாலும் அது உலகின் ஆக்கபூர்வ செயற்பாட்டுகளுக்குரியது என்று கருதி அணுக வேண்டும்.

"இன்றைய குழந்தைகள் ஆன்மீக ரீதியாக உருவாக்கப்பட வேண்டும். வன்முறைகள் பலனை அளிக்கா. பெற்றோர்கள் சொல்பவற்றை, அல்லது விரும்புபவற்றை செயல்வடிவில் பிள்ளைகளுக்குக் காண்பிக்க வேண்டும். அன்பு - நம்பிக்கையை உருவாக்கும் குடும்பத்தில் பெற்றோர், மூத்தோரின் அன்பு அவர்கள் பாதுகாப்புத் தருவார் என்ற எண்ணத்தை உருவாக்கும். இது தளரும்போது தான் சீர்குலைவு ஏற்படும்.

"சமூகக் கட்டுப்பாட்டைக் கொண்ட சமூகமயமாக்கலுக்கு எம் ஒவ்வொருவரினதும் பங்களிப்பு அவசியம். இவ் விளம் சந்ததி புரட்சிக்கெனப் பிறந்த சந்ததி. ஆன்மீகமே எவரையும் நெறிப்படுத்தி வழிப்படுத்தும். எல்லோருடைய வாழ்க்கையிலும் பிரச்சனைகளிருக்கத்தான் செய்கிறது. பிரச்சனைகளில்லாதார் வாழ்வில் ஏதோ பிழையுண்டு. எந்தச் சிக்கலையும் ஆன்மீக ரீதியில் நோக்குவோமாயின் 70% அதற்கு தீர்வுகாண முடியும். அத்துடன் அதற்கு ஒரு திருப்பத்தையும், வளர்ச்சியையும் காண முடியும். இது குடும்பவாழ்விற்கும் பொருந்தும், உருவாக்கங்களுக்கும் பொருந்தும்.

இவ்வாறாக பேராசிரியர் திரு. ஜி. எம். செபஸ்தியாம்பிள்ளை அவர்கள் – "சமூக விழுமியங்கள்" பற்றி யாழ் நற்சமூக நடுநிலையத்தில் நடைபெறும் "நற்சமூக தலைமைத்துவப்பயிற்சி நெறி" பயிலுநருக்கு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

எஸ். ஜீ. வி.
யாழ்ப்பாணம்

# மனித முன்னேற்றநிலையத்தின் இன்றைய பணிகள்

— அகதிகள் நிவாரணம்,
— அகதிகள் புனர்வாழ்வு
— இயற்கை அழிவுகளின் நிவாரணம்—புனர்வாழ்வு
— இனக்கலவர அழிவுகளில் நிவாரணம்—புனர்வாழ்வு
— தடைச் சட்டங்களால் பாதிக்கப்படுவோர் நிவாரணம்
— நீதி, சமா தானத்திற்கான நேரடித் தொடர்புகள்
— குடி நீர் வசதி
— இல்லிட அமைப்பு
— சுயதொழில் வாய்ப்பு (சங்கங்களின் வழியான கடன்)
— மீனவர் கடனுதவித் திட்டம்
— விவசாய கடன் உதவித் திட்டம்
— கால்நடை, கோழிப்பண்ணை கடன் உதவி
— உணவுவகை உற்பத்தி கடன் உதவி
— சிறு கைத்தொழில் கடன் உதவி
— குடிசைக் கைத்தொழில் கடன் உதவி
— தையல் நிலையம் கடன் உதவி
— நூல் நிலையம் (செயலகத்தில் உண்டு)
— சுகாதாரப் பயிற்சி
— தலைமைத்துவப் பயிற்சி
— இளைஞர் பாசறைகள்
— சமூக மாற்று அமைப்பு முறைகள் (சாதி, சீதனம்)
— ஆரம்பக் கல்வி
— தொழில் கருத்தரங்குகள்
— முறைசாராக் கல்வி
— கருத்தரங்குகள்
— கலை நிகழ்ச்சிகள்

---

## மனப்பூவில் மணம் பெறுவீர்

பணம் பணம் பணம்
பணம் அற்றவன் பிணம்!
இனம் சனம் தினம்
பணத்தால் கொள்ளும் சினம்!
பணம் கெடுக்கும் குணம்
தலைக்கு ஏற்றும் கனம்!
பணம் கொல்லும் பாணம்
செய்யும் மனத்தில் ஊனம்!
பணத்தை இடுக தானம்
உயரும் அதனால் மானம்!
பயன்படாத பணம்
இருந்து என்ன தினம்?
சிந்தித்து ஒரு கணம்
மனப் பூவில் பெறுக மணம்!

எஸ். இரஞ்சன் செல்வக்குமார்
அல்வாய்.

# மலரும் உன் வாழ்வு

பாரினில் உயிர்கள் பரிதவித்து
பாதையின்றி கண்கலங்கும் நிலை கண்டு - நண்ப
பார்த்துப் பார்த்தும் பாராத
பாவை போன்று வாழ்வதென்ன!

சிறகொடிந்த பறவை போன்று
சின்னா பின்னமாய் வாழும் — வழியற்றவர்களை
சீர்தூக்கி பாதுகாக்கும் — நல்
சீராளனாய் விழித்து எழு!

ஏழ்மையிலே துவன்றிடும் — நம்
ஏழைகள் துயர் துடைக்க
ஏலுமானமட்டும் பாடுபடு — அது
ஏழுலகமும் வெற்றி தரும்.

உன்னிடம் உள்ளதைப் பகிர்ந்து கொடு,
உன்னையும் வேண்டுமானால் கொடுத்து விடு.
உண்மைக்கு என்றும் தலை வணங்கு.
உலகம் என்றும் உனதாகும்.

சுயநலம் சுத்தமாய் அகற்றிவிடு
சுற்றம் சூழ வாழச் செய்.
புதிய உலகம் ஒன்று உருவாக்கும் — நல்
புதுமைப் பித்தனாய் புறப்படு!

மமதை அற்ற நெஞ்சுடனே
மனுமக்கள் வாழ வழி சமைத்திடு — அப்போது
மலரும் உன் வாழ்வு
மகிழ்ச்சி என்றும் உன் மனதில்

மே. யஸ்ரீன் சௌகான்
சில்லாலை—பண்டத்தரிப்பு

# 'நித்யா நேசமாகிறாள்'

(செல்வி ஏ. ஆர். இந்திரா பெர்னாண்டோ)

'ஐயோ அம்மா, தாங்க முடியவில்லையே' என்ற அடிவயிற்றைப் பிழிந்தெடுக்கிறாற் போல் எழுந்த அவல ஓலத்தின் ஒலி கேட்டு, திடுக்கிட்டுக் கண் விழித்தாள் நித்தியா. வாட்சைப் பார்த்தாள். நேரம் விடியற்காலை மூன்றரையை மெல்ல எட்டிக்கொண்டிருந்தது. ஆனால், அப்புலரும் பொழுதிற்கேயுரிய பறவைகளின் இனிமையான கீச்சிடல்களோ, மிருகங்களின் ஒலிகளோ எதுவுமேயில்லை. மாறாக வைத்தியசாலை — அதுவும் அரசாங்க வைத்தியசாலைக்கே உரிய மருந்துகளினது நெடியும், நோயின் வேதனையைத் தாங்க மாட்டாத நோயாளிகளின் முனகலுமாகப் பொழுது புலர்ந்து கொண்டிருந்தது. பகல் முழுவதும் அலைந்த அலைச்சல்களினால் உடலும், அடுத்தடுத்து வருகின்ற சோதனைகளால் உள்ளமும் புண்ணாகி விட்டிருந்தது. நாற்காலியிலேயே உட்கார்ந்து தூங்கியதில் முள்ளந்தண்டு முறிந்து விடுவதைப் போல் வலித்தது. கண்களை அசதியால் மூடியது ஒரு மணித்தியாலம் மட்டுமேயாகையால் கண்கள் அனலாகக் கொதிக்க தலையோ ஒரே கனமாகக் கனத்துக் கொண்டிருந்தது.

இரவு பதினொரு மணியிலிருந்து ஆஸ்துமாவினால் இளைத்துக் களைத்து ஓய்ந்து போய் இரண்டு மணியளவில் தான் கண்ணயர்ந்திருந்த தாயைப் பார்க்கும் போது இமைகளைத் தள்ளிக் கொண்டு பெருகத் தலைப்பட்ட கண்ணீரைச் சிரமப்பட்டு உதடுகளைக் கடித்த வண்ணம் அடக்க முற்பட்டாள். ஆயினும் அவளையும் மீறி ஓரிரு துளிகள் சிதறி விழத்தான் செய்தன. மெதுவாக எழுந்து சொட்டுச் சொட்டாக விழுந்து கொண்டிருக்கும் சேலைன் துளிகளைச் சற்று குறைத்து வைத்தாள். அக்கடுங்குளிரிலும் பொட்டுப் பொட்டாக தாயின் நெற்றியில் துளிர்த்திருந்த வியர்வைத் துளிகளை மெதுவாக ஒற்றியெடுத்தாள். பொழுது விடிவதற்கு இன்னும் நேரமிருந்ததால், திரும்பவும் வந்து அமர்ந்தவளது சிந்தனை மெதுவாகப் பின்னோக்கிப் பிரயாணப்பட ஆரம்பித்தது.

★

நிந்தியாவுக்கு நினைவு தெரிந்த நாள் முதலாகவே அவள் தாய் ஜெனட்டுக்த ஆஸ்துமாதான். நித்தியா கருவில் உருவெடுத்த போது ஆஸ்துமாவும் சேர்ந்தே உருவெடுத்தது என்று அவளது பாட்டி அடிக்கடி சொல்லக் கேட்டிருக்கிறாள். தனது தாயின் இத்தீரா நோய்க்குத் தான் தான் காரணம் என்ற எண்ணம் அப்பிஞ்சு உள்ளத்தில் அப்போதே பதிந்துவிட அவள் வளர வளர அவ்வெண்ணமும் சேர்ந்தே வளர

வாரம்பித்தது. விளைவு தாயின் மீது இயற்கையாகவே கொண்ட அன்பு பன்மடங்காகப் பெருகிற்று.

ஜோர்ஜ் நித்தியாவின் அப்பா-ஜெனட்டைக் கைப்பிடித்தபோது இரு பக்கக் குடும்பத்தாரும் பணத்திலோ, அன்றி தெய்வ பக்தியிலோ எதவிதக் குறையுமின்றி நலமாகத்தான் இருந்தார்கள். மூத்தவன் ஆனந்தும், அதற்கடுத்தாற்போல் நித்தியாவும், அவளைத் தொடர்ந்து சந்தியா-சஜீவன் ஆகியோரைப் பெற்று வளர்த்தெடுத்தபோதும் வளமாகத்தான் வாழ்ந்தார்கள். அந்தப்பாழாய்ப்போன '83' கலவரம் மட்டும் வராதிருந்தால் இன்றும் முன்னைரைப் போலத் தான் வாழ்ந்திருப்பார்கள். ஜோர்ஜ் - ஓர் வித்தியாசமான மனிதர். 'தனக்கு மிஞ்சியது தானம்' என்பதைமாற்றிப் பிறர்க்குப் போக மிஞ்சியதுதான் தனக்கு என்ற கொள்கையுடையவர். வைந்திருந்தது ஓரளவு சிறிய கடையென்றாலும் கூட அவரது நல்ல உள்ளத்திற்கு இறைவன் அளித்த ஆசிரைப் போல் வியாபாரமும் குறைவின்றி நடந்து வந்தது. அவ்வருமானம் மாதம் பதினைந்துநாட்கள் வியாதியாக் கிடக்கும் மனைவியைப் பராமரிக்கவும், நான்கு செல்வங்களைப் படிப்பிக்கவும், கேட்டு வருவோர்க்கு இல்லையென்னாது கொடுக்கவும் போதுமாகவிருந்தது இறைசித்தத்தினால் என்று தான் கூறவேண்டும்.

'அதிகமாகக் கடன் கொடுக்காதீர்கள் ஐயா' என்று புத்தி சொல்பவர்களுக்கு 'நான் இலங்கைக்கு வரும்போது ஒன்றுமே கொண்டு வரவில்லையே, ஆண்டவர் தானே இரக்கப்பட்டு இவ்வளவையும் கொடுத்திருக்கிறார். மரம் வைத்தவனுக்கு தண்ணீர் விடத் தெரியாதா ?' — என்று ஓர் மெல்லிய புன்னகையுடன் கூறுவார். - என்ன உறுதி இந்த மனுஷருக்கு என்று பழகியவர்கள் வியக்காமலிருந்ததில்லை.

இப்படியிருக்கையில் தான் இரக்கமற்ற அரக்கனைப்போல் 'ஜூலை' கலவரம் வந்தது. மாற்றுடைகூட இல்லாத நிலையில், அகதியான பத்தாயிரம் பேர்களுள் இக் குடும்பமும் ஒன்றாக அகதிமுகாமைத் தஞ்சமடைந்தது. நித்தியாவுக்கு அதற்கடுத்த மாதம் ஆகஸ்டில் உயர்தரப் பரீட்சை வேறு. பல்கலைக்கழகம் என்ற குறியோடு படித்தவளுக்கு இது பேரிடியாயிற்று. கலங்கினாள் முதல் முறையாக. ஆயினும் தளரவில்லை. அவளது பகீரத பிரயத்தனமும், ஆர்வமும், அதற்கு ஆண்டவன் கொடுத்த பரிசுமாகப் பல்கலைக்கழகத்திற்கு அவளது பாடசாலையில் அவள் மட்டுமே தெரிவு செய்யப்பட்டாள். மூத்தவன் ஆனந்த் அதுவரை செல்

லப்பிள்ளையாகப் பெற்றோரின் அரவணைப்பிலிருந்தாலும் – இனி பெற்றோரையும் உடன் பிறப்புக்களையும் தான் அரவணைக்க வேண்டிய நிலையுணர்ந்து அதுவரை கனவில் கூட எட்டிப்பார்த்திராத திருமலைக்கு - தன் மாமனின் கடைக்கு - உதவிக்கு என்ற பெயரில் வேலைக்குச் சேர்ந்தான். ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்து பழக்கப்படாத அச்சிறு குடும்பத்திற்கு ஆனந்தின் தற்காலிகப் பிரிவு கூட பெரும் வேதனையைக் கொடுத்தது.

மூன்று மாதங்களின் பின்னர் அகதி முகாமைவிட்டுப் பலவந்தமாகக் குடும்பங்கள் வெளியேற்றப்படுகையில் இக்குடும்பமும் வெளியே வரவேண்டியதாயிற்று. அக்கினியால் ஆட்கொள்ளப்பட்டு அரைகுறை நிலையில் இடிந்திருந்த வீட்டை ஓரளவு சீர்திருத்தி மீளக் குடிவந்த போதுதான் சேமிப்பு இல்லாத நிலையில் வாழ்க்கைக்கு இனியென்ன செய்வதென்ற வினா பயங்கரமாக வியாபித்தது. ஆனாலும் அப்போது கூட ஜோர்ஜ் தளரவில்லை. இளையவன் சுஜீவன் சிறுவனானாலும் கூட ஆத்திரப்பட்டான்.

‘அப்பா கடவுள் கடவுள்னு சொல்வீங்களே, அவர் இப்போ தூங்கிட்டாரோ அப்பா’ – என்றவனுக்கு

‘மகனே அப்படிச் சொல்லாதேயப்பா, நமக்கும் பொருள் மட்டுந்தானே போனது–எத்தனை குடும்பங்களில் உயிர்களும் பறிக்கப்பட்டது. இவ்வளவு தூரம் நம்மைக் காத்து நடத்திய இறைவனுக்கு நாம் நன்றி சொல்லனும் மகனே’ – என்பதே அவர் பதிலாயிற்று. நித்தியாவும் மனதிற்குள்ளாகக் கொதித்துப் போயிருந்தாலும் இறைவனைக் குற்றம் சொல்லியே அறியாத அக் குடும்பத்தில் பிறந்ததால் யாவற்றையும் மௌனமாகச் சகித்துக் கொண்டாள்.

இச்சந்தர்ப்பத்தில் தான் அப்பங்கிற்குப் புதிதாக மாற்றமாகி வந்திருந்த பங்குதந்தை அருள்நாதர் உண்மையில் தன் செய்கையிலும் அருள்நாதராக ஆதரவுக் கரம் நீட்டினார். அவர்களது வேதனைகளையும், கண்ணீரையும் உணர்ந்து அன்பன் யேசுவின் அடியான் அவர்தானோ எனும்படியாகத் திரும்பவும் அவர்களது கடையைக் கட்டி முடிக்கத் தோள் கொடுத்தார். ஆயினும் ‘83’ கலவரமோ முன்னரைப் போல் அக்குடும்பம் எழுந்துவிடாதபடி தனது பயங்கர முத்திரையைச் சற்று பலமாகவே பதித்து விட்டுச் சென்றிருந்தது. வயதின் தள்ளாமையும், எதிர்காலம் பற்றிய கவலைகளும் வெகுவாகத் தாக்க ஜோர்ஜ் – ஜெனட் இருவருமே நோயின் பிடிக்குள் சுலபமாக விழுந்தார்கள். ஏற்கனவே நோயாளியான ஜெனட் படுத்த படுக்கையானாள். ஆஸ்பத்திரிக் கட்டிலே தஞ்சமானாள்.

'ம் ம் ம் மா ......' என்ற தாயின் முனகலைக் கேட்டு திரும்பவும் இந்நிஜவுலகிற்கு வந்த நித்தியா யோசனையின் விளைவாக விழியோரத்தில் துளிர்த்திருந்த நீரை மெதுவாகச் சுண்டி விட்டாள். அழுகையை அடக்க முற்பட்ட தால் கரகரத்த தன் குரலை மறைக்க முயன்றபடி

'ஏனம்மா ? என்ன செய்கிறது? சேலைன் குத்தியிருக்குமிடம் ரொம்பவும் நோகிறதம்மா ? இன்னும் கொஞ்ச நேரத்தில், விடிவதற்குள்ளாக சேலைன் முடிந்துவிடும் தூங்குங்கள் அம்மா' — என்றாள் உண்மையில் சேலைன் அரைப் போத்தலுக்கும் மேலாக இருந்தாலும் தாயின் ஆறுதலுக்காகப் பொய் சொல்ல வேண்டியிருந்தது.

நித்தியாவின் குரலைக் கேட்டதும் 'நித்தியா நீ இன்னும் தூங்கவில்லையா ? பார், என்னால் எத்தனை பேருக்கு சிரமம் என்று. இந்த ஆண்டவன் இன்னும் ஏன் என்னை எடுக்கமாட்டேன்கிறார்! வீட்டில் எல்லாரும் எப்படியிருக்கிறார்கள் ? சுஜீவன் சாப்பிட்டானோ தெரியவில்லை. நீயும் எத்தனை நாள்தான் விடியவிடிய கண் விழிப்பாய்' — என்று பலவீனமான குரலில் புலம்பத்தொடங்கினாள். இரண்டு வார்த்தைகள் அதிகமாகப் பேசியதும் பலவீனமான உடல் நடுங்கியது. இயலாமையால் கண்ணீரும் பெருக்கெடுத்து மெதுவாக வடிந்து இரு காதோரங்களையும் நனைக்க நித்தியா தாயை அதட்டினாள்.

—'ஷ், சும்மா அலட்டிக்கொள்ளாமற் படுங்களேம்மா. உங்களுக்கு நோய் கவலையால்தான், நல்லாய்த் தூங்கினீங்கன்னா மோர்னிங் தெம்பாக இருக்கும்' — என்றபடி தாயின் கண்ணீரைத் துடைத்து விட்டாள்.

— 'நித்தியா ......' திரும்பவும் மெதுவாக முனங்கினாள் ஜெனட். 'என்னம்மா ?... என்றபடி குனிந்தவளிடம், நித்தியா அப்படி எனக்கு ஏதாவது ஒன்று ஆகிவிட்டால், நீதான் பொறுப்பான பிள்ளை ...... அதனால் ... என்பதற்குள் நித்தியா சற்று கோபமாக அதட்டினாள்.

—'என்னம்மா நீங்கள் ...... இந்நேரத்தில் இதெல்லாம் எதற்கு உங்களுக்குத்தான் இப்போரொம்பவும் குணமென்று நேற்று கூட டாக்டர் சொன்னார் தானே... பேசாமற் படுங்களேம்மா ...... என்றாள். நீயும் கொஞ்சநேரம் படு நித்தியா. எவ்வளவு நேரம் தான் உட்கார்ந்து கொண்டேயிருக்கப் போகிறாய்: — என்றபடி சற்று நகர்ந்து நித்தியாவுக்கு இடம் கொடுக்க முற்பட்டாள் ஏற்கனவே ஓர் கட்டிலில் இரண்டு பேர். ஒருவருக்கே தாராளமாகப் படுக்க இடம் போதாது. இதில் இவளுக்கு வேறு படுக்க இடமா? அந்த நேரத்திலும் சிரிப்பு வந்தது நித்தியாவுக்கு.

—'வேணும்மா—இதுவரைக்கும் நான் படுத்துத்தானே இருந்தேன் நீங்கள் வசதியாகப் படுங்கள்' — என்றவாறு தாயைச் சரியாகப் படுக்கவைத்து, போர்வையை இழுத்துச் சரி செய்துவிட்டாள். பின்னர் ஜெனட்டிடமிருந்து பேச்சு சத்தமே வரவில்லை. தாயையே கூர்ந்து பார்த்தாள் இதயத்துடிப்பிருக்கிறதா? பயமாக இருந்தது. கையைப் பிடித்துப் பார்த்தால் அம்மா விழித்து விடுவாளோ? திரும்ப நன்றாக உற்றுப்பார்க்க மார்பு லேசாக ஏறி இறங்குவது தெரிந்தது. — 'தேங்க்யூ ஜீஸஸ்' என்று மனதிற்குள்ளாகவே நன்றி கூறியபடி வராண்டாவிற்கு வந்தாள் நித்தியா. ஜில்லென்ற ஊதற்காற்று புழுங்கிய மனதிற்கு இதமாக இருந்தது.

—'அம்மா சொன்னபடி அவவுக்கு ஏதும் நடந்து விட்டால் ......

ஓ! ஜீஸஸ், அப்படியொன்றுமே நடந்துவிடக் கூடாது .....' அந்த நினைப்பே பெரும் பயத்தைக் கிளப்பிவிட திரும்பவும் விரைவாக வந்து அம்மாவைப் பார்த்தாள். சேலைன் துளிகள் சீராக இறங்கிக் கொண்டிருந்தன. திரும்பவும் வெளியே வந்தாள் நித்தியா.

— அம்மாவுக்கு ஏதும் நடந்து விட்டால் ..... அம்மா இல்லாத வீட்டில் எப்படி இருப்பது ...... திரும்ப எனக்கு வாசிற்றிக்கும் போக முடியாது. வீட்டைப் பார்க்கணும், அப்பாவைப் பார்க்கணும், சுஜீவனைக் கவனமாகப் படிக்க வைக்கனும்...... — தேவையற்றவைகளெல்லாம் யோசனை யோசனையாக வந்தது நித்தியாவுக்கு.

முன்பு அம்மா நன்றாக இருந்த போது கோயிலுக்குச் சென்று வருவதற்குச் சற்று தாமதமானாலும்கூட ஆயிரம் தடவைகள் உள்ளுக்கும், வெளியேயுமாக நடந்து —'ஜீஸஸ் அம்மா சீக்கிரமா வந்திரணும். இனி அம்மாவுக்கு முணுமுணுக்காமல் வேலை செய்து கொடுப்பேன். கோபிக்கவேமாட்டேன் ...... என்றெல்லாம் பிரார்த்திப்பாள்.

அம்மா வந்ததும் வராததுமாக —'ஏம்மா லேட், .....நான் எவ்வளவு பயப்பட்டேன் தெரியுமா? உங்களுக்கெங்கே தெரியப் போகுது.' என்று முணங்குவாள். அதற்கு ஜெனட் —'நானென்ன சின்னப்பிள்ளையா நித்யா. காணாமல் போய்விட......' வரும் வழியில் தெரிந்தவர்களைக் கண்டேன். அதான் லேட்டாயிட்டுது" ...— என்றுஎவ்வளவுதான் சமாதானம் சொன்னாலும் அரைமணித்தியாலத்துக்கும் மேலாக அம்மாவுடன் கதைக்காமல் மௌனவிரதம் காத்து தண்டித்த பின்தான் நிம்மதி. இந்தப்பழைய நினைவுகளெல்லாம் இப்போது நித்தியாவை அலைக்கழிக்க அவளுக்குப் பயமாய் இருந்தது.

கீர்த்தனை படிக்கலாமென்றால் இடம் சரியில்லை. கொஞ்சம் ஜெபம் பண்ணினால் மனதிற்கு ஆறுதலாயிருக்கும் போல் தோன்றவே ஓரத்திலிருந்த வாங்கினை நோக்கிப் போனாள் நித்தியா. நேரத்தைப் பார்க்க அது நாலரை என்றது.

மெல்லிய குரலில் ஜெபிக்கத் தொடங்கினாள்,

—'குட்மோர்னிங் ஜீஸஸ். நான் உம்மை நேசிக்கிறேன். ஜீஸஸ் என் இதயத்தளவால் உம்மை நேசிக்கிறேன ஜீஸஸ். இப்போ நான் படுகிற வேதனைகளையும், அம்மாவின் வேதனைகளையும் உமது கல்வாரிப் பாடுகளோடு ஒப்படைக்கிறேனப்பா. நானும்மை எவ்வளவு நேசிக்கிறேன் தெரியுமா ஜீஸஸ்! ஆனால் நீர் ஏன் ஜீஸஸ் எனக்கு இவ்வளவு சோதனைகளையும் அடுக்காகத் தருகிறீர். ஆரம்பத்திலேயே நீர் எங்களை வறியவர்களாகவே படைத்திருக்கலாமே ஜீஸஸ். அப்பா முன்பு எப்படி இருந்தார்கள்... இப்போ எங்களுக்காகப் பெட்டிகளைத் தூக்கிக்கொண்டு கடை கடையாக...... ஏறி இறங்கி...... முன்னும் தோளுமாக... ஓ! மை ஜீஸஸ்... இதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லையப்பா. இந்த சந்தியாவும் கூட இந்தச் சின்ன வயதில் காதல்ங்கிற வலையில் விழுந்து, படிப்பையும் குழப்பி ... தானும் குழம்பி எப்படிக் கஷ்டப் படுகிறாள். இந்த பிரச்சனையை எப்படி ஜீஸஸ் அப்பா அம்மாவிடம் சொல்லி சமாளிப்பது... இந்த அண்ணனும் கூட இன்னும் பொறுப்பில்லாமல்... வியாபாரத்திலும் பொறுப்பில்லாமல் இருக்கிறார்களே ஜீஸஸ். சுஜீவனும் இன்னும் சின்னவன்தானே. அவனை எப்படிப் படிப்பித்து ஆளாக்குவது... எனக்கும் வாசிற்றி ஸ்ரைக் என்ற பெயரில் இப்படியே மாதக்கணக்கில் மூடியிருந்தால் எப்போது படித்து முடித்து உழைக்கத் தொடங்குவது...

அப்பா பட்ட கடன்களை எப்படி ஜீஸஸ் அடைப்பது ...... — நித்தியா மனம் வெதும்பி அழுதாள்.

—'ஜீஸஸ் நீர் என்ன கஷ்டத்தைத் தந்தாலும் பரவாயில்லையப்பா. ஆனால் என் அப்பா அம்மாவுக்கு மட்டும் ஒண்ணும் நடக்காமலிருக்கணும் ஜீஸஸ். என் கஷ்டங்களைப் பகிர்ந்து கொள்ள யாருமே இல்லை ஜீஸஸ் நான் உம்மிடம் சொல்லாமல் யாரிடமப்பா சொல்ல முடியும். நீர் என் மூத்த சகோதரனைப் போலத்தானே ஜீஸஸ ப்ளீஸ் ஹெல்ப் மீ ஜீஸஸ். ளீஸ் டோண்ட் லீவ் மீ அலோன். இந்தத் துன்பங்களையெல்லாம் நான் தனியாகத் தாங்கக் கூடிய சக்தியைத் தாரும் தகப்பனே... எந்த கஷ்டம் வந்தாலு என்னை உம்மிடமிருந்து பிரித்து விடாதபடி மன வலிமையைத் தாரும்

மப்பா. நீர்பட்ட துன்பங்களோடு ஒப்பிட்டால் இதெல்லாம் ஸிம்பிள் தான் ஜீஸஸ். ஆனாலும் நான் பலவீனமுள்ள மனுஷன் தானே. நான் யோபு அல்ல சுவாமி, உமது சோதனைகளெல்லாவற்றையுமே பொறுமையாக ஏற்றுக் கொள்ள ......ஜீஸஸ், ஜீஸஸ் என்று புலம்பினாள் நித்தியா.

மனம் இப்போது சிறிது ஆறுதலாக இருந்தாலும் தொடர்ந்த சோதனைகளின் விளைவாக மனதில் ஒரு வித விரக்தி மனப்பான்மை அவளிடம் குடிகொள்ள திரும்பவும் பிதற்றத் தொடங்கினாள்.

—'மை ஸ்வீட் ஜீஸஸ், இது நாள் வரை நீர் தந்த எல்லாக் கஷ்டங்களையும் பொறுத்து விட்டேன். இனிமேல் எங்கம்மாவுக்கு அதிக வருத்தம் வந்தால் இனி உம்மைக் கூபபிடவே மாட்டேன் ஜீஸஸ். உமது பெயரைக் கூட உச்சரிக்கவே மாட்டேன்...... ஜீஸஸ்...'—

தன்முன்னே இயேசு நிற்பதாகவே உணர்ந்து சற்று கோபத்தோடேயே செபத்தை முடித்தாள் நித்தியா.

பொழுதும் நன்றாக விடிந்து விட, தாதிகளின் நடமாட்டமும் அட்டென்டன்களின் நடமாட்டமும் அதிகரித்தது. வார்ட்டைச் சுத்தம் பண்ணத் தொடங்கினார்கள். ஜெனட்டுக்கு சேலைனும் முடிந்து விட்டதால் அதை நர்ஸ் கழற்றிச் செல்ல நித்யா தாயைப் படுக்கையிலிருந்த படியே காலைக் கடன்களை முடிக்கச் செய்தாள். காப்பியைப் பருக்கினாள். டாக்டர் வருமுன் ஆயத்தப்படுத்தினாள். நேற்றைப் பொழுதை விடத் தாயின் முகம் இன்று தெளிவாக இருப்பது போல் தெனபட்டவே மனதிற்குள்ளாகவே ஆயிரம் முறை யேசுவுக்கு நன்றி சொன்னாள்.

டாக்டர் வந்தபின் இன்று அம்மாவை வீட்டுக்கு கூட்டிக் கொண்டு போகலாமா டாக்டர் என்று கேட்க வேண்டுமென்று எண்ணிக்கொண்டாள். வீட்டுக்குப் போனதும் அம்மாவைக் கட்டிலிலேயே இருக்க விடவேண்டும். ஒரு சின்ன வேலைகூட வைக்கக் கூடாது என்றெல்லாம் எண்ணினாள்.

—'வார்ட்டைச் சுத்தம் பண்ணி முடிக்கும்வரை நோயாளரைப் பராமரிப்பவரெல்லாம் வெளியே போங்கள்' — என்ற சுத்தம் பண்ணுபவர்களது குரலைக்கேட்டதும் மற்றவர்களோடு நித்தியாவும் வெளியே வந்தாள். குளிருக்கு ஆதவனின் அணைப்பு இதமாக இருந்தது. அரைமணி நேரத்தியாலத்தின் பின மீண்டும் உள்ளே போனவள் தாய்க்கு லேசாக வியர்த்துக் கொண்டு வருவதைப் பார்த்ததும் அதிர்ச்சியாக இருந்தது.

—'ஏனம்மா இளைப்பு வருவதைப் போலிருக்கிறதா'— எனக்

கேட்க ஜெனட்டும் மூச்செடுக்கச் சிரமமாக இருப்பதாகச் சைகையால் உணர்த்திஞள். நித்தியா உடனடியாக ட்யூட்டியிலுள்ள நர்ஸிடம் சென்று மாத்திரைகளை வாங்கிப் பருக்கிஞள். டாக்டர் வரும் நேரமும் நெருங்கியது. இருபத்திரண்டு வருடங்களாக மாத்திரைகளுக்கு பழக்கப்பட்ட உடம்பு இப்பொதெல்லாம் மாத்திரைகளைக் கணக்கெடுப்பதேயில்லை. அடுத்து இன்ஜெக்ஷன் அடுத்து சேலைன். இப்போது எதற்குமே கட்டுப்பட மறுத்தது.

டாக்டர் ரவுண்ட் வரத் தொடங்கவும், ஜெனட்டுக்குப் பயங்கரமாக இளைக்கவும் சரியாக இருந்தது. மிகவும் சிரமப்பட்டு வாயாலேயே மேல் மூச்சும் கீழ் மூச்சும் எடுக்க ஆரம்பித்தாள். ம்... ம்... என்கிற சத்தம் பயங்கரமாகக் கேட்கத் தொடங்கியிருந்தது. நித்யா செய்வதொன்றும் தெரியாமல் தவித்து மூச்செடுப்பதற்கு இலகுவாக முதுகையும் நெஞ்சையும் நீவி விட்டபடி நின்ருள்.

—'என்னுல் தாங்க முடியவில்லையே... கர்த்தரே இன்னும் ஏன் என்னை வதைக்கிறீர்கள் என்னை எடுத்து விடுங்கள்... எனக்கு ஏனப்பா இந்தச் சோதனை...'— என்று ஜெனட் மூச்சுத் திணறல்களுக்கிடையே கத்தவும் டாக்டர் இருவரும், நர்ஸ்மார் யாவரும், பயிற்சி பெறுகின்ற நர்ஸ்மார் எல்லோருமாக ஓடி வந்தார்கள். ஓர் நர்ஸ் சேலைனைக் கொண்டு வர, இன்னுெர் நர் ஒக்ஸிஜன் சிலிண்டரைத் தள்ளிக் கொண்டுவர வார்டே அமர்க்களப் பட்டுப் போனது.

—அடுத்த இதழில் முடியும்.

---

மரணச் செய்தி கூறுகின்ற
மணியின் ஓசை கேட்கையிலே
மரித்தவன் எவனே என்றெண்ணும்
மனது வேண்டாம், இறந்தவனே
என்னிற் பகுதி என்றெண்ணில்
ஏற்றம் அடையும் மாநிலமே.

— யாரோ

# ம. மு. நிலையத்தின் நிவாரணப் பணிகளின் வகை

1. பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம்

1983 லிருந்து 1985 வரை கிளிநொச்சி முல்லைத்தீவு பகுதிகளிலேயே நிவாரணவேலை பெரும்பாலும் நடைபெற்றது. பின்பு இராணுவ நடவடிக்கைகள் தீவிரமடைந்த காரணத்தால் யாழ்ப்பாணப் பகுதிக்கும் இது விஸ்தரிக்கப்பட்டது. வேலைக்குப் போகமுடியாத நிலையிலிருந்த மீனவருக்கும் பிற தொழில் புரிவோருக்கும் பங்குக் குருக்களின் மூலமும், ஏனைய மதத்தலைவர்கள் மூலமாகவும் நிவாரணம் வழங்கப்பட்டது. சில சமயங்களில் முழுமறைமாவட்டமும் பிரச்சனைகளில் மூழ்கியிருந்த போது 64க்கு மேற்பட்ட நிலையங்களுக்கு உடனடி நிவாரணம் வழங்க வேண்டியிருந்தது.

1987–1988ல் 32640 குடும்பங்களுக்கு உதவியளிக்கப்பட்டது. 87 அக்டோபர்—டிசம்பர் மாதங்களில் கிராமங்களில் 24409 குடும்பங்களுக்கு உணவுப் பொருள்களும், 5209 குடும்பங்களுக்கு மாதாந்த பண உதவியும் (ரூ 300— ரூ 450) அளிக்கப்பட்டது.

2 தடுப்புக்காவலிலுள்ளோருக்கு நிவாரணம்

முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டோருக்கு உடைகள், சவர்க்காரம் போன்றன ரூ200/— வரை அளிக்கப்பட்டன. பூஸா முகாமிலேயே 699 பேர் இவ்வாறு உதவி பெற்றனர்.

குடும்பத்தின் உழைக்கும் அங்கத்தவர் தடுப்புகாவலில் இருந்தால், அக்குடும்பங்களுக்கும் மாதாந்த உதவிப்பணம் அல்லது ஒரே முறையில் முதலீட்டுக்காக ரூ 2400 வழங்கப்பட்டது.

3 உயிரிழப்பிற்கு நிவாரணம்

மரணச் சடங்கிற்காக உடனடியாக ரூ 500/— அளிக்கப்படும். அவர் உழைக்கும் அங்கத்தவராஞல் மேலும் உதவி பெறப்படலாம்.

4 வடுதலை பெற்றோருக்கு புனர் வாழ்வு

சுயதொழில் முதலீட்டுக்காக ஒரு குடும்பத்துக்கு ரூ 2400 அளிக்கப்படுகிறது. மிக ஏழைக் குடும்பங்களுக்கு மேலதிக உதவிகளும் கொடுக்கப்படுகின்றன.

5 உழைக்கும் அங்கத்தவரை இழந்த குடும்பங்களுக்கு புனர்வாழ்வு

தொடக்கத்தில் இவ்வாறு பாதிக்கப்பட்டோருக்கு ரூ 10,000 முதல் ரூ 20,000வரை வழங்கப்பட்டது. உதவிகோருவோர் தொகை அதிகரித்தபோது எமது நிதி நிலைமைக்கேற்ப தொகையைக் குறைக்க வேண்டியதாயிற்று. தற்போது முதலீடாக

ரூ 2400 வழங்கப்படுகிறது. மீன வர்களுக்கு அதிக முதலீடு தேவைப்படுவதால் அவர்கள் மேலும் ரூபா 10,000 கடனுகப் பெற்றுகொள்ள முடியும்.

6 உழைப்போரை இழந்தவிடத்து ஒன்றிணைந்த அபிவிருத்தி

மிகக் கடுமையாகப் பாதிக்கப் பட்ட சில விடயங்களில் வழங் கப்படும் நிவாரணப்பணம் முத லீட்டுக்கல்லாமல் வீடமைப்பு, கல்வி, பராமரிப்பு போன்ற பிற தேவைகளுக்குச் செலவிட அனு மதியளிக்கப்படுகிறது. குமுகினி படலில் கொலையுண்டோரது 31 குடும்பங்களுக்கு ரூ 459,860. 40ம், குருநகர் அசபபாவிதத்தில் கொலையுண்டோரது 20 குடும் பங்களுக்கு ரூ 343, 167.75ம் கோப்பாயில் 36 குடும்பங்களுக் கும், மாணிப்பாயில் 14 குடும்பங் களுக்கும் ஒரு குடும்பத்துக்குத் தலா ரூ 10 000 மும் நிவாரண மாக அளிக்கப்பட்டது.

7 வன்செயலால் அனுதையாக்கப் பட்டபோது கல்வி

1987 வரை அனுதைகளைப் பாமரிக்க நாம் குடும்பங்களுக்கு உதவி செய்தோம். 1988ல் உருத் திரபுரத்தில் "உதயதீபம்" என் னும் தற்காலிக இல்லம் அமைக் கப்பட்டது. அங்கு 33 பிள்ளை கள் உள்ளனர். யாழ்ப்பாணம் அன்பகத்தில் 31 பிள்ளைகளையும், முல்லைத்தீவில் 15 பிள்ளைகளை யும் நாம் பராமரித்து வருகிறோம். ஒரு பிள்ளைக்கு மாதாந்தம் ரூபா 300/- வரை செலவிடப்படுகிறது. சில விசேட சந்தர்ப்பங்களில் உயர்கல்விக்கும் ரூ 500/– உதவப் படுகிறது

8 தற்காலிக வதிவிடங்கள்

வதிவிடங்கள் அமைப்பதற் காக ஆயிரக்கணக்கான விண்ணப் பங்கள் எமக்கு வந்துகொண்டி ருக்கின்றன. இவற்றில் ஓலைக் கூரைகளையுடைய மணவீடு களையே நாம்தெரிவு செய்தோம். நாம் 809 வதிவிடங்களை அமைப் பதற்கு உதவி செய்தோம். நாம் செலவை ரூபா நாலாயிரத்துக் குள்வைக்க முயன்றுலும் ஒரு வீட்டுக்கு ரூ 5000த்துக்கு மேல் செலவாயிற்று.

9 கமக்காரர் புனர்வாழ்வு

900 மெற்றிக் தொன் உர வகைகளை கிளிநொச்சியிலுள்ள 2000 கமக்காரருக்கு விநியோ கிப்பதற்கு ஒழுங்கு செய்திருந் தோம். ஆனல் அதைக் கொண்டு வர எமக்கு வாகனவசதி போதா மையால் கிளிநொச்சி அரசாங்க அதிபர் இத்திட்டம் நிறைவேறத் துணைபுரிந்தார் 3700 கத்திகள் (ஒன்று ரூ 95.80) 3700 மண் வெட்டிகள் (ரூ 112/–) 3700 அலவாங்குகள் (ரூ 166 70) பாதிக்கப்பட்ட கமக்காரர் களுக்கு கொடுக்கப்பட்டன. இன்னும் இது போன்ற கருவிகள் வேண்டும் போது கொடுக்கப்பட் டன. விதை நெல் முதலியன வாங்குவதற்கு 1989ல் கடன்கள்

வழங்கப்படும். இக்கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்த ரூ 1,000,000 தேவைப்படும்.

10 மீனவர் புனர்வாழ்வு

மீனவர் கிராமங்களை எமது தொண்டர் தரிசித்து தேவைகளை அவதானிக்கின்றனர். ஏற்கெனவே நாம் மீனவர் கடன் திட்டத்தில் ரூ 1,500.000/– வழங்கியுள்ளோம். மாரீசன்கூடல் மாதகல் ஆகிய இடங்களில் சனசமூக நிலையங்கள் கட்ட உதவியுள்ளோம்.

11 வேறு தொழில் புரிவோர் புனர்வாழ்வு

தச்சர், மேசன்மார், சலவைத் தொழிலாளர் முதலிய பலதரப்பட்ட தொழிலாளருக்கும் அவரவர்க்குத் தேவையான கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

12 சுயதொழிலுக்கான பயிற்சி

பத்திரிசியார் தொழில் நிறுவனத்தில் 74 இளைஞர் பயிற்சி பெற உதவி செய்யப்பட்டது. இளவாலை, சில்லாலை, ..றணி ஆகிய இடங்களில் தட்டச்சு வகுப்புகள் நடத்தப்பட்டன. வெல்டிங் வசதிகள் ஐந்து பங்கு..லும், தையல் நிலையங்கள் 26 இடங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்தையல் நிலையங்களுக்கு நான்கு தையல் மெஷின்களும், ரூ 10000/–மும் வழக்கமாகக் கொடுக்கப்படுகின்றன. இரண்டு சக்கர உழவுயந்திரம் கல்லுடைக்கும் இயந்திரம், அரைக்கும் இயந்திரம், ரேடியோ சைக்கிள் திருத்தக் கருவிகள் முதலியனவும், வாடகைக்கு விடப்படும் கதிரை, பீங்கான், முதலியனவும் பல கிராமங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பப்படம், பிளாஸ்டிக் பைகள், மீன்பிடி வலைகள், கற்பூரம் போன்றவற்றை உற்பத்தி செய்யும் சிறுகைத் தொழிலுக்கான பயிற்சியும் சில கிராமங்களில் அளிக்கப்பட்டுள்ளது.

13 உடல் நலசேவை

87 அக்டோபர் நடவடிக்கைகளின் போது நாம் 36 கிராமங்களுக்கு வைத்திய உதவி அளித்தோம். எமது நிலையத்தில் ஓர் வைத்திய நிலையம் இயங்கி வருகின்றது. நடமாடும் வைத்தியப் பிரிவும் எம்மிடம் உண்டு. தேவைப்படும் போது அது பங்குகளுக்கும் கிராமங்களுக்கும் சென்று பணிபுரியும். நாம் ஏற்கெனவே 734 சுகாதாரப் பணியாளருக்குப் பயிற்சியளித்துள்ளோம். இன்னும் பலரைப் பயிற்றவுள்ளோம்.

14 உள நலசேவை

பயங்கர அனுபவங்கால் ஏற்பட்ட அதிர்ச்சி காரணமாக உள நிலை பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக யாழ்ப்பாணத்தில் ஒரு உளவியல் சிகிச்சை நிலையத்தை ஏற்படுத்தியுள்ளோம் தகுதி பெற்ற வைத்தியர்கள் இவர்களுக்கு சிகிச்சையளிக்கின்றனர். இவ்வாறு பாதிக்

கப்பட்டோரைப் பராமரிப்பதற்கென தொண்டர்கள் பயிற்றப்படுகின்றனர்.

15 ஊனமுற்ரேருக்கு உதவி

காலில்லாதவருக்கு ஊன்றுகட்டைகள் கொடுக்கப்படுகின்றன. செயற்கைக் கால் வேண்டுவோருக்கு சம்பந்தப்பட்ட நிறுவனத்திடமிருந்து அதைப் பெற்றுக் கொள்ள ஒழுங்கு செய்யப்படுகிறது.

16 போஷாக்கற்ற சிறுவர்களுக்கு உணவு

10,800 பிள்ளைகளுக்கு திரிபோஷ வழங்குவதாகத் திட்டமிட்டிருந்தோம். 1989ல் திரிபோஷ பெறமுடியவில்லை. மூன்று வயதுக்குட்பட்ட போஷாகற்ற பிள்ளைகளுக்குப் பால்மா விநியோகிக்கிறேம்.

17 போக்குவரத்து

பெரும்பாலான புனர்வாழ்வு நிலையங்களில் பொருட்களைக் கொண்டு செல்ல போதிய வாகனங்கள் இல்லை. அத்தியாவசியப் பொருட்களான உணவு, உடை மருந்துவகை, சிமெந்து, பாத்திரங்கள் போன்றவற்றை எமது வாகனங்கள் அங்கு எடுத்துச் செல்கின்றன. எந்த ஆபத்தான வேளையிலும் வாரந்தோறும் கொழும்புக்கு சென்று வருவது எமது நிவாரணப்பணிக்கு இன்றியமையாததாயிருக்கிறது.

18 விற்பனை நிலையம்

எமது புனர் வாழ்வு நிலையங்களின் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதற்கு யாழ்ப்பாணம் புனித யாகப்பர் ஆலயத்தின் முன் ஒரு விற்பனை நிலையம் திறக்கப்பட்டுள்ளது.

19 கருத்தரங்கு நிலையம்

பண்டத்தரிப்பு, அச்சுவேலி, உருத்திரபுரம் ஆகிய இடங்களில் மூன்று பயிற்சி நிலையங்கள் உள்ளன. யாழ்ப்பாணத்தில் கருத்தரங்குகளை நடத்துவதற்கு புனித பத்திரிசியார் வீதியில் ஓரிடத்தை வாடகைக்கு அமர்த்தியுள்ளோம்.

20 இயற்கை அழிவுகள்

வெள்ளம், வரட்சி போன்ற இயற்கை அழிவுகளின் போதும் நாம் நிவாரணம் வழங்குகின்ரேம். பங்குகள் அல்லது கிராமங்களிலிருந்து பாதிக்கப்பட்டோர் தொகையும் தேவைப்படும் உதவி பற்றிய விபரமும் எமக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

21 வேண்டுகோளின் பேரில்

யாழ். அரசாங்க அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க 370 குடும்பங்களுக்கும், கிளிநொச்சி அரசாங்க அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க 140 குடும்பங்களுக்கும் நிவாரணம் அளித்துள்ளோம். நல்லை ஆதீனக் குருக்கள், முஸ்லீம் மௌலவி ஆகியோருக்கூடாக 349 குடும்பங்களுக்கும் நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளது.

குறிப்பு: மனித முன்னேற்ற நிலையத்தினுல் செய்யப்பட்ட சமூகப் பணிகள் பற்றிய விபரங்கள் மேலே தரப்பட்டுள்ளன. இப்

பணிகள் எமது நிலையத்தாலும் எமது தொண்டர்களாலும் செய்யப்பட்ட போதிலும் இவை நிறைவேற எத்தனையோ பேரின் பங்களிப்பு அவசியமாக இருந்திருக்கிறது. தமது பொருளுதவியாலும், உடலுழைப்பாலும், ஆலோசனைகளாலும், தக்க தருணத்தில் தகவல் தருவதனாலும் இன்னலுற்றோர் நிவாரணம் பெற உதவியுள்ளனர். இவர்களைப் போல் இன்னும் அநேகரின் உதவியும் ஒத்துழைப்பும் எமக்குத் தேவை. இயற்கை அழிவுகளினாலோ வன்முறைகளினாலோ துன்புறும் மக்களின் துயர் துடைக்க முன்வருமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

# மனித முன்னேற்ற நிலையம்

இயக்குனர் :- அருட் திரு. ம. இ. பஸ்

நிர்வாகச்செயலாளர் :- அருட் செல்வி. கு நிற்மு. (1988 வரை) அருட் செல்வி. ப. திரேசியா தி. கு. க.

திட்டமிடல் அதிகாரி :- திரு. சி. மரியதாஸ், மபிலிட்டி.

செயலர்/தட்டெழுத்தாளர் :- திருமதி. ஜெ. ரோகினி.

நிவாரணப்பிரிவு :- திரு. ஞா. அருளானந்தம், யாழ்ப்பாணம்.

வாசிகசாலை :- செல்வி. ம. பத்மசேகரி, குருநகர்.

ஊழியர்கள் :- திரு. எஸ். சுவாம்பிள்ளை, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம். திரு. யே. யோசேப்பு, குருநகர், திரு. எஸ். யோசேப்பு, தேவன்குளம், (1988 வரை) செல்வன். எ. அல்பிரட், கிளிநொச்சி, (1988 வரை) செல்வன். சு. பிலேந்திரன் முருங்கன், திரு. எஸ் வோல்டர் கோணாவில், திரு. என். விமல்ராஜ் கிளிநொச்சி, திரு. என். ஜெயசீலன் கிளிநொச்சி, திரு. எஸ். அன்ரன் யாழ்ப்பாணம், திரு. ஜே யேசுதாசன் சில்லாலை, செல்வன். அ. வசந்தன் அரியாலை, திரு. இரத்தினம் மிருசுவில், திரு. எஸ். சரவணபவானயர் வட்டுக்கோட்டை, (986 வரை) திரு. க. பவளராணி குரும்பசிட்டி, தெல்லிப்பளை (1984 வரை) திரு. ஞா. ஞானசக்தி, கிளிநொச்சி (1984 வரை) திரு. சம. கண்ணன் (1984 வரை) திரு. ம. சூசைநாயகம், (1983 வரை) திரு. ச. றஞ்சித்குமார்.

பிரதிநிதிகள் :-

பங்குத்தந்தையர்கள் :- யாழ்/கிளி/முல்லை மாவட்டங்களில் கத்தோலிக்க ஆலயங்களின் பரிபாலகர்களின் (பங்குத் தந்தையர்) மதகுருமார் அனைவரும் எமது நிலையத்தின் பிரதிநிதிகளாவர். பங்குத் தந்தையர் வழியாகவே எமது சேவை சகல கிராமங்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது.

# இளமைக்காலம்

பூவாகி; காயாகி; கனியாகையில்
　　புகழோடு இளமை மணம் வீசுது
நோயாகி; பிணியாகி; துயராகையிற்
　　பேயாக வந்து தினம் வாட்டுது
மருந்தாகி; விருந்தாகி; இருந்தாள்கையில்
　　மனதோடு இன்பம் உறவாடுது
பிணந்தாங்கி; மனமேங்கிப்; பிரிவாகையில்
　　மனந்தாங்க முடியாமல் நிலைசாயுது

*

பணமாகி; படிப்பாகி; பதவியாள்கையில்
　　பண்ணோடு வாலிபம் கலையாகுது
வனமாகி; கனமாகி; சுமையாகையில்
　　வந்துற்ற வாலிபம் குலைவாகுது
கண்ணாகி; கருத்தாகி; செயலாகையில்
　　காரியம் இளமைக்கு வசமாகுது
மண்ணாகி; சிதைவாகி; மறைவாகையில்
　　மனம்கண்ட விதிக்கூற்றுச் சரியாகுது

*

பாலாகி; தேனாகி; தீனாகையில்
　　பலத்தோடு வாலிபம் நிறைவாகுது
தூளாகி; கூழாகிப் பாழாகையில்
　　குணத்தோடு வல்லமை குறைவாகுது
வாளாகிக்; கூராகி; பேராகையில்
　　வாலிபம் வீரத்தின் தொடராகுது
நாளாகி; நரையாகி; நலிவாகையில்
　　நாளும் முடிந்ததென்று ஓய்வாகுது

— செ. ஞானராசா
செம்மண்தீவு

சிறு கதை

விரிந்த நிலப்பரப்பின் ஊடாக அந்தப் பாதை நீண்டிருந்தது. சில காலத்திற்கு முன்னர் வரை சிறு¨று குன்றுகளாகக் குவிந்திருந்த பற்றைகளைக் காணவில்லை.

# நாளும்

சிறு செடிகளைத்தவிர கண்ணுக் கெட்டிய தூரம் வரை கற்பாறைகள் கலந்த தரைதான். அப்பால் அணிவகுத்துப் பச்சை உடையணியாத பனை மரங்கள்.

பனி பூசிய வானம் பனைகளின் உச்சியில் சங்கமமாகிப் போயிருந்தது. சிதைந்து போன நெற்றிப் பொட்டுப் போல குறை நிலா மங்கலாகத் தெரிந்தது.

இன்னும் சிறிது நேரத்தில் இருள் கவிந்து விடும். என்பதை நல்லதுரையர் உணர்ந்தார். அந்த உணர்வே அவரது நடையின் வேகத்தினை அதிகப்படுத்தியிருந்தது

ரவுணுக்குப் போய் இருட்டுவதற்குள் வீடு திரும்பி விட வேண்டும் என்ற நினைப்பு முனைப்பாக இருந்து கூட காலம் சதி செய்து விட்டது.

போன அலுவல் சரிவராதது போலவே மாலையில் புறப்பட்ட பஸ்சும் இடை நடுவில் நின்று விட்டது. மனதுக்குள்ளும் வெளியிலும் பஸ் றைவரைத் திட்டிக் கொண்டு இறங்கிய சனங்களுடன் நல்லதுரையரும் இறங்கினர்.

மஞ்சள் வெய்யில் படர்ந்திருந்த அந்த நேரத்தில் வீடுபோய்ச் சேர ஆறு கிலோ மீற்றர் தூரமும் எதிர் காலம் போலவே நீளமாகத் தெரிந்தது. மனத்தில் அடங்கிப் போய் இருந்த பதட்டமும் மீள உருவெடுத்தது.

எல்லோரையும் போல பஸ்காரர்களைத் திட்டாமல் தன்னையே தான் நொந்து கொண்டு "நாங்கள் செய்த பாவத்திற்கு நாங்கள் அனுபவிக்கிறம்." என எந்தப் பிரச்சினையின் போதும் சனங்கள் சொல்லிக் கொள்வது போல அவரும் நொந்து கொண்டார்.

பிரதான தெருவினைத் தவிர்த்துக் கொண்டு குறுக்குப் பாதைகள் வழியே அவர் பயணப்பட்டதன் விளைவுதான் இந்தக் கற்தரை வெளியின் ஊடான நடைப் பயணம்.

# பொழுதும்

இந்தப்பாதை அவருக்குப் பழக்கப்பட்ட பாதைதான் நடந்து போன நேரங்கள் மிக மிகக் குறைவு பெரிய இரும்புக்கரியர் பூட்டிய சைக்கிளில் தான் அவர் செல்வது வழக்கம்.

வெளியைக்கடக்கும் போது அவருக்கு எப்போதும் சிந்தனை பீறிட்டுக் கிளம்பும். எத்தனை பேர் தோட்டம் செய்வதற்குக் காணிகள் இல்லாமல் கஷ்டப்படும்போது இந்தப் பெரிய நிலப் பரப்பு ஏன் இப்படி மலடாக இருக்கிறது ?

நல்லதுரையரின் தகப்பனாரின் காலத்தில் அவர்களது தோட்டம் கூட இப்படிக் கல்லுத்தரையாக இருந்ததாகவே தகப்பனார் சொல்லியிருக்கின்றார்.

அந்தக் கல்லுத் தரையில் கல்லுக் கிளறி எடுத்துத் தான் தோட்டம் செய்யத் தொடங்கியிருந்தார்கள். பின்னர் அது பசும் பயிர்கள் விளையும் புனித பூமியாகி விட்டது.

பரந்த இந்த நிலப்பரப்பினைக் கடக்கும்போதெல்லாப் நெஞ்சிலே வேதனை கசியும். முழு நிலத்தினையும் முறையாகப் பண்படுத்தி தோட்ட நிலமாக்கிப் பயிரிடத் தொடங்கினல் எப்படி இருக்கும் என்ற கேள்வி பிறக்கும்.

பசுமை பொங்கப் புகையிலையும், வெங்காயமும் உயிர்த்துடிப் போடி பனியில் சிலிர்த்துப்போய் இருக்கும் காட்சியினை நினைத்துப் பார்ப்பதுண்டு.

ஆனல் இப்போது அந்த நினைப்பு அவர் மனதில் கிளர்ந்தெழவில்லை. பொடித்துப்போன அவர் வாழ்க்கையினை ஒத்ததாகவே உயிரோட்டமான நினைவுகளும் முடமாகிப் போயிருந்தன.

சிறு செடிகளும் கற்பாறைகளும் செம்மிப்போய் இருந்த தரையினைப் போலவே அவரது தோட்ட நிலமும் பாழ்பட்டுப் போய் விட்டது.

தோட்டத்து நினைவு வந்தவுடனேயே நடையில் ஒரு தளர்ச்சி வெளிப்பட்டது, குதிக்காலினைத் துளைத்த முள்ளினை இழுத்தெடுத்தபோது கண்களில் கண்ணீர் வெளிப்பட்டது,

நிச்சயமாக அது முள்ளினல் ஏற்பட்ட வலி காரணமாக வெளிப்பட்ட கண்ணீர் அல்ல என்பது அவருக்குத் தெரியும்.

ரேட்டுக்கரையோரமாக பரந்திருந்த தோட்டங்களில் அவரது தோட்டம் பொன்னுத்துரையரின் தோட்டத்திற்கு அடுத்ததாக உள்ளது.

வழக்கமாக அதிகாலையில் பொன்னுத்துரையர் தோட்ட வரம்பின் ஊடாக நடந்து கொண்டு தனது தோட்டத்தினைப் பார்ப்பதைப் போலச் சந்தோஷமான அலுவல் அவர் வாழ்க்கையில் எதுவும் இல்லை.

கண்ணெதிரே வளரும் பிள்ளைகள் போலத் தோட்டத்தில் பயிர்களின் வளர்ச்சி குளிர்மையும், பசுமையும் பனிகாலத்து வடியற் காலையில் பனித்துளிகள் முத்துக்களாக ஒளிர்விட பயிர்கள் பிரகாசிக்கும் அழகுக் கோலமும்—?

எத்தனைமுறை பிரப்பெடுத்தாலும் இதற்கு நிகர் இதுதான்என

நித்தமும் நினைத்து நினைத்து கடைசியில் கண்டது வேதனை தான்.

நல்லதுரையர் விழிகளைத் திரையிட்ட கண்ணீரைத் தோளில் கிடந்த துவாயினால் துடைத்துக் கொண்டார், கண்ணீரைத்தான் துடைக்க முடிந்தது. மனத்தின் நெருடல்களை என்ன செய்யலாம்?

இனிய குரல் எடுத்துப்பாடிய பறவைக் கூட்டம் ஒன்று தலைக்கு மேலால் பறந்து போனது. அவைக்கு எந்தவிதமான கவலை களும் இல்லை. தலை நிமிர்த்தி அவற்றினைப் பார்த்தால் அவை சந்தோஷமான ஆரவாரத்துடன் அவர் பார்வையினை விட்டு வானத்தில் கரைந்து போயின.

தோட்டத்துப் பக்கம் போகா மல் விட்டு ஒன்றரை வருடத் திற்கு மேல் ஆகி விட்டது. போகாமல் விட்டு அல்ல போக முடியாமல் போய்.

களைத்துப்போன நேரங்களில் எல்லாம் அமிர்தமாக விளங்கும் கிணறும், கிளைகள் அடர்ந்த பூவ ரசப மரங்கள் கொண்ட ஆடுகா லும் — வெகு தூரத்திற்கு அப் பாலே தோட்டத்தை அடையா ளம் காட்டும் தென்னை மரங்க ளும் கனவு கண்டதுபோல மனத் திரையில் தெரிகின்றன.

இந்தக் கற்தரை நிலப்பரப்பி லாவது சிறிய செடிகளும் இடை யிடையே எட்டிப் பார்க்கும் புற் களும் இருப்பதால் கொஞ்சமா வது பசுமை எட்டிப் பார்க்கின் றது.

தோட்டத்தில் இந்தச் சிறிய பசுமையாவது தென்படுமா? எப் போதாவது தோட்டம் இருந்த தெருவால் சைக்கிளை உருட்டிக் கொண்டு நடக்கும் போது இந்த நினைவுதான் வரும்.

மனைவியும் பிள்ளைகளும் அவரு மாக எந்த நேரமும் அந்தச் செம் மண்ணோடு சினேகிதமாக இருந்து அதன் சுக துக்கங்களில் பங்கு கொண்டு உழைப்பினைக் காணிக் கையாக்கிஅதன் உதவியினாலேயே வாழ்க்கையைக் கொண்டு நடாத் தினர்.

கடந்த ஒன்றரை வருடமாகத் தோட்டத்து வருமானம் இல்லா மல் அடுத்தவனை எதிர்பார்த்து அரசாங்க உதவிக்காக அலைந்து கலியாணப் புறோக்கர் போலக் கால்கள் தேய்ந்தது தான் மிச் சமாகியது.

தொடர்ச்சியாக நடந்ததனைப் பினால் நல்லதுரையர் வியர்வை யில் குளித்திருந்தார். சிறு சிறு முளைகளாக வியர்வை முகிழ்த் திருந்தது. அந்தப் பாதை ஒரு ஒழுங்கையில் வந்து ஏறியது. இன்னமும் மூன்றுகிலோ மீற்ற ருக்கு அவர் நடந்தே ஆக வேண் டும்.

ஒழுங்கையில் ஜன நடமாட்டம் இருந்தது. ஒழுங்கைக் கரையோர

வீடுகளின் சுவர்க் காயங்கள் மறைந்து போயிருந்தன. சுவர்க் காயங்களை மறைத்து விடலாம் தான்? நல்லதுரையர் துவாயி ஞல் நெஞ்சைத் துடைத்துக் கொண்டார்.

இந்த ஒழுங்கைக் கரையோர வீடுகளில் கூட ஆட்கள் இல்லா மல் இருந்தார்கள். ஆனால் இப் போது வீடுகளைத் திருத்திக் கொண்டு குடியிருக்க வந்து விட் டார்கள். ஆனல் என்ஞல்தான்- தோட்டத்துக்குப்போக முடிய வில்லை. "என்ரை செம்பாட்டு மண்ணில விழுந்து புரண்டு உருள முடிய வில்லை" என நல்லதுரை யர் நினைத்துக்கொண்டார்.

"என்ன காணும் நடையில வெளிக்கிட்டு விட்டீர்-அதுவும் களைச்சு விழுந்துபோய்- "என்ற படி வழிமறித்தவரை நல்லதுரை யர் பார்த்தார்.

நீளமான சுருட்டுப் புகைய புழுதிபடர்ந்த உடலும் புன்ன கையுமாய் மிளிர்ந்த அவரைப் பார்த்து "ரவுணுக்குப்போய் திரும்பிவர மினிபஸ் பிழைப் பட்டுநிற்குது. அடுத்த பஸ்சுக்கு நிண்டு பார்க்க நேரம் போட்டுது எண்டு நடந்து வாறன்,வரட்டே" "நேரம் இடக்கு. அவசரப்படா தையடாப்பா. உன்னேடை ஒரு அலுவல் கதைக்க வேணும்"

நல்லதுரையருக்குச் சங்கட மாய்ப் போய் விட்டது. என்ன செய்வது என்று குழம்பி நிற்கவும் முடியாமல்; போகவும் முடியா மல்.

"என்ன விசயம்" என்ருர்.

"விவசாய நஷ்ட ஈட்டுக்குப் போம் நிரப்பிக் கொடுத்தனியே"

நல்லதுரையருக்குச் சப்பென்று போய் விட்டது. "இல்லை" என் ருர் அக்கறை இல்லாமல்

"ஏன்

"பாப்பம்-பாத்துச் செய்வம் எண்டு இருக்கிறன்" என்ருர்.

உதென்ன கதையப்பா கதைக்கி ருய் உங்கை சனமெல்லாம் எடு பட்டுத்திரியுது. தோட்டம் செய்யாமல் வைச்சிருந்த காணிய ளுக்கே சனம் ஐம்பதினுயிரம் அறுபதிஞயிரம் நட்டம் காட்டி எழுதிக்கொடுக்குதுகள். உன்ரை கதை என்னவோ புளிச்சல் கதை மாதிரி இருக்கு"

நல்லதுரையர் பதில் சொல்ல வில்லை. பொழுதுபடுவதற்குள் வீடுபோய்ச் சேரவேண்டும் என் பதில் குறியாக இருந்த அவரால் இக் கதையளுக்கு முழுக்கவனம் செலுத்த முடியவில்லை.

"பாத்துச் செய்வம்" என்ருர் மீண்டும்.

"என்னப்பா-பாத்துச் செய்யப் போருய் கெதியாய் எழுதிக் கொடுத்தால்தானே அரசாங்கம் தாற கொஞ்சத்தை எண்டாலும் கெதியில வேண்டலாம்"

"வேண்டி என்னத்தைச் செய்யி றது"

"ஏன்"

"சந்ததி சந்ததியாய் எங்கடை வியர்வையில ஊறிப்போய் இருக் கிற தோட்டத்துக்கு இவை தாற நட்ட ஈட்டால என்ன நடக்கும்.

நாலு நாளைக்கு நாங்கள் சாப்பிடலாம், தோட்டத்துக்கு அசால ஏதும் பிரயோசனமே? தோட்டம் பழையபடி பசுமை பொங்கிற தோட்டமாகுமோ?"

"உதென்ன கதை கதைக்கிறாய்"

"என்ரை கதை என்ன விசர்க் கதை மாதிரியே இருக்கு. ஆருக்கு வேணும் நட்ட ஈடு? பழையபடி எங்களை தோட்டம் செய்ய விட்டாலே பெரிய புண்ணியம். அதுக்கு ஆரேனும் வழி சொல்லுவாங்களே" எனக் கேட்டார் நல்லதுரையர். "உன்னுடைய கதைக்கப் பிரயோசனம் இல்லை" என்று அவரின் பேச்சுக்களை முறித்துக் கொண்டு நடையைத் தொடர்ந்தார் நல்லதுரையர்.

ஒழுங்கைக் கரையோரமாக இருந்த பிள்ளையார் கோயிலில் மாலைநேரப் பூசை முடிந்து விரல் விட்டு எண்ணக் கூடிய பக்தர்கள் பிரசாதத்துடன் புறப்பட்டுக் கொண்டிருந்தனர்.

கோயில் வாசலில் ஒரு நிமிடம் நின்று கை எடுத்துக் கும்பிட்டு அப்பால் நகர அந்த நினைவு வந்தது.

ஒவ்வொருவருடமும் புகையிலை விற்ற பின்னர் வாங்கியவர்கள் நாள்கண்டு வெட்டிய பின்னர் பிள்ளையார் கோயிலில் பொங்கல் நடக்கும்.

இருள் சரிந்து வரும் மாலை நேரத்தில் கிளு கிளு வென்று குளிர்காற்று வீசும் அந்த அற்புதமான வேளையில் நடக்கும் அந்தப் பொங்கல் மனத்தைத் தெய்வீகப்படுத்தும் தன்மை வாய்ந்தது.

இப்போது—

தோட்டம் எப்படி அன்னியமானதோ புகையிலை எப்போது நடமுடியாமல் போனதோ அன்றைக்கே பொங்கலும் பொங்க முடியாமற் போய்விட்டது.

பொங்கல் என்ன? சாதாரணமாக கும்பிடப்போவதே பெரும் பாடாகிவிட்டது. எத்தனை தடைகள் — எவ்வளவு சிக்கல்கள்.

கரு கருவென்று இருண்டு கொண்டிருந்தது. நடையின் வேகத்தினைக் கூட்டினார். ஏற்கனவே களைத்து விட்டபடியால் மூச்சு விடக் கஷ்டமாக இருந்தது.

தூரத்தில் வீட்டுவாசல் தெரிந்தது வெளிவிறாந்தை வெளிச்சம் வெளிக் கேற்றில் நாலைந்து பேர் காத்திருப்பதை நிழல்களாகக் காட்டியது.

யாராக இருக்கும் என்ற யோசனை உண்டானது போலவே பிள்ளைகளும் மனிசியும் தன்னைத்தான் பார்த்துக் கொண்டு நிற்கிறார்களே என்ற பதிலும் அவருள் வெளிப்பட்டது.

விரைவாக நெருங்கினார்.

மூன்று பெண்பிள்ளைகளும், கடைசிப் பெடியனும் முகத்தில் கலவரம் படியக் காத்திருந்தனர்.

"என்ன பிள்ளை" என்றார் மூத்தவளைப் பார்த்து.

"ஐயா" என்னும்போதே அவள் குரல் உடைந்தது. விம்மலும் வெளிப்பட்டது.

"ஐயா! உங்களைப் பார்த்துக் கொண்டுவர மாமாவை அனுப்பினாங்கள்" என்றாள் இரண்டாவது பெண்.

"ஏன் பிள்ளை" என்று கேட்கும் போதே நல்லதுரையர் இனம் தெரியாத பதட்டத்தில ஆழ்ந்து போனார்.

"அம்மா மாட்டுக்குப் புல்லுப் புடுங்கப் போட்டு வரேக்க வாகனம் ஒண்டு அடிச்சுப் போட்டுது ஐயா, சரியான காயம். அறிவு மயங்கி அம்மாவை பெரியாஸ் பத்திரிக்குக் கொண்டு போட்டினம். மாமியும் சின்னப் மாவும் சின்னையாவும் கணேசனும் தான் காரில கொண்டு போனவையள்" என மூத்தவள் அழுது கொண்டு சொன்னதைக் கேட்ட நல்லதுரையர் கதிகலங்கிப் போனார்.

தலையைச் சுற்றத் தொடங்க அவர் வேலியோடு சாய்ந்து கொண்டு...... என்ன செய்வது என்று தடுமாற அவரின் நிலையை உணர்ந்த பிள்ளைகள்.

அவரைப் பற்றிப்பிடித்துக் கொண்டு "ஐயா ஐயா" என்று சத்தம் போட்டு அழத் தொடங்கினர்.

சிறுபொழுதில் தன்னைத் திடப் படுத்திக் கொண்ட அவர்.

"டேய் சண்முகா ஓடிப்போய் நாகராசா மாஸ்ரரிட்டை அவரின்ரை சைக்கிளை வேண்டிக் கொண்டு வா" என்றார்.

அவன் ஓடிப் போய் வந்தான் சைக்கிளுடன். கும்மிருட்டு சூழ்ந்த தெருவில் சனநடமாட்டம் குறைந்த அந்த நேரத்தில் நல்லதுரையர் ஆஸ்பத்திரியை நோக்கிப் பயணப்பட்டுக் கொண்டிருந்தார்.

இணுவையூர்

சிதம்பர திருச் செந்திநாதன்

---

## அறிவிலிகள்

இரு அறிவிலிகள் ஓர் அறையில் இரவுப் பொழுதைக் கழிக்க நேர்ந்தது. அவர்களில் ஒருவனுக்குத் தனது சேட்டைக் கொழுவுவதற்கு சுவரில் ஆணி அறைய வேண்டியிருந்தது. எங்கோ தேடி ஓர் ஆணியை எடுத்துக்கொண்டான். ஆணியின் தலைப்பகுதியை சுவரில் வைத்து அதன் கூர்முனையில் அறைந்து பார்த்தான். ஆணி சுவரில் ஏறவில்லை. அவன் மற்றவனுக்குக் கூறினான்: "கூர் வைக்க வேண்டிய இடத்தில் தலையைவைத்து ஆணியை யாரோ ஒரு முட்டாள் செய்து விட்டான்" என்றான்:

மற்றைய அறிவிலி கூறினான்:

ஆணி செய்தவன் முட்டாள் இல்லை. நீதான் முழுமுட்டாள். இந்த ஆணியை இந்தச் சுவரின் மறுபக்கத்தில் கொண்டு போய் அறை, எல்லாம் சரியாக இருக்கும்" என்றான். அவனும் சுவரின் மறு புறத்தில் ஆணியை வைத்து அறைமேல் அறை கொடுக்க அறையின் வேகத்திற்கு தாக்குப்பிடிக்க முடியாத அறையின் சுவர் பல கூறுகளாக வெடிப்புண்டு அறிவில்யின் தலையிலே ஒரு சிறுதுண்டு விழுந்த போது அறிவிலி அறிவிழந்து மயங்கிவீழ்ந்தான். அறிவிலி தெளிந்து எழுந்தபோது அவன் அறிவாளியாகக் காணப்பட்டான். காரணம் அனுபவம் அவனை அறிவாளியாக்கிவிட்டது.

தொகுப்பு: வி. ஜி. குணம், அ.ம.தி. கரவெட்டி.

# ம. மு. ந. நிலையம் அபிவிருத்திப் பாதையில் அபிவிருத்தித் திட்டங்கள்

தற்போதைய நாட்டுநிலை காரணமாகப் பாரிய அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பிக்க முடியாமற் போனது மட்டுமல்லாமல், ஏற்கனவே நடைமுறைப்படுத்திவந்த பல்வேறு சிறியசிறிய செயற்திட்டங்கள்கூடத் தடைப்படும் நிலையேற்பட்டுள்ளது. நிவாரணம், புனர்வாழ்வுபோன்ற செயற்பாடுகளும், செயற்திட்டங்களுமே மிகவும் அத்தியாவசியமானவையாகத் தென்படுகின்றன. இருந்தும் பாலர் பாடசாலைகள், சுகாதாரப்பயிற்சி, குடிநீர் விநியோகம் போன்ற திட்டங்கள் ஓரளவு தடையின்றி நடைபெற்று வருகின்றன. எமது நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சமூக அபிவிருத்தித் திட்டங்களை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1) பாலர் கல்வி, 2) சுயநம்பிக்கை ஏற்படுத்தும் கைத்தொழிற் பயிற்சியும், வருமானம் பெறும் திட்டங்களும், 3) கல்வி, 4) சுகாதாரம்.

மேற்குறிப்பிட்ட திட்டங்களின் செயற்பாடுகள் அனேகமானவை குறிப்பிட்ட சமூகத்துடன் தொடர்புகொண்டு அவர்களின் முன்னேற்றத்திற்காகிய பல்வேறு முயற்சிகளை மேற்கொள்வதற்கு நுழைவாயில்களாகப் பயன்படுத்தப் படுகின்றன. புரியாத பல திட்டங்களைத் திணிப்பதைவிட, மக்களுக்கு அவர்களின் நிலையை உணரவைத்து, முன்னேற்றத்திற்கு வேண்டிய செயற்பாடுகளை அவர்கள் அறிந்து தாமாகக் குழுக்களை உண்டுபண்ணி அக்குழுக்களினூடாக அபிவிருத்திப் பாதையில் முன்னேறவைப்பதே (Consciensfization) எமது நோக்கம்.

1. பாலர் பாடசாலைகள்:

இத்திட்டத்தின் கீழ் அந்தந்தக் கிராமத்தின் தேவைக்கேற்ப கட்டிடங்களை அமைக்கவேண்டிய தளபாடங்கள், விளையாட்டு உபகரணங்கள், கற்பித்தலுக்காகிய உபகரணங்கள் கொள்வனவுகள் கல்வி கற்பிக்கும் ஆசிரியருக்குக் குறைந்தது மூன்று வருடங்களுக்கு ஊதியம் வழங்கவேண்டிய நிதி உதவிகள் வழங்கப்படுகின்றன. அத்தோடு மட்டுமல்லாமல் அங்கு கடமைபுரியும் ஆசிரியர்கள் பாடசாலைப்படிப்பு முடிந்தோருக்கு சிறு கைத்தொழில்கள் (தையல், பன்னவேலை போன்றவை) பழகுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தும், வயது வந்தோருக்கும் இளைஞருக்கும் பல்வேறு கருத்தரங்குகளை ஒழுங்குசெய்தும், அக்கிராமத்திலுள்ள சுகாதாரம், கல்விபோன்ற துறைகளிலுள்ள பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு முயற்சி எடுத்தும் அக்கிராமத்தை வழிநடத்துவோராகச் செயற்பட எதிர்பார்க்கப் படுகின்றனர். ஒரு சில இடங்களில் பெற்றோர் வேலைதேடிச் செல்வதில் அவர்களின்

குழந்தைகளை பெற்றோர் திரும்பிவரும்வரை (காலையிலிருந்து மாலை வரை) பராமரித்து உணவூட்ட பாலர் பராமரிப்பு நிலையங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

பாலர் பாடசாலை விபரங்கள்:

| | | |
|---|---|---|
| கிளிநொச்சி (புனர்வாழ்வு நிலையங்கள்) | ... | 4 பாடசாலைகள். |
| மானிப்பாய் | ... | 6 பாடசாலைகள். |
| குடத்தனை | ... | 1 பாடசாலை. |
| வல்வெட்டித்துறை | ... | 1 பாடசாலை. |
| சில்லாலை | ... | 4 பாடசாலைகள். |
| புதுக்குடியிருப்பு | ... | 2 பாடசாலைகள். |
| முகமாலை, மிருசுவில் | ... | 2 பாடசாலைகள். |
| சேநதாங்குளம் | ... | 5 பாடசாலைகள். |
| மாங்குளம் | ... | 3 பாடசாலைகள். |
| கிளிநொச்சி | ... | 10 பாடசாலைகள். |

2. சுயநம்பிக்கை ஏற்படுத்தும் தொழிற்பயிற்சியும், வருமானம் பெறும் திட்டங்களும்:

குறிப்பாசப் பாடசாலைப்படிப்பு முடிந்து வீட்டில் இருக்கும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் தமக்கென ஒரு தொழில்வாய்ப்பை ஏற்படுத்தவும், அவற்றால் பெறப்படும் வருமானத்தால் குடும்பச் செலவுகளின் ஒரு பகுதியையாவது ஈடுசெய்யவும் இத்திட்டம் உதவுகின்றது.

அவையாவன:

| | | |
|---|---|---|
| தையல் பயிற்சி | — | பண்டத்தரிப்பு மகளிர் அபிவிருத்திச் சங்கம் (மேலும் பல இடங்களில்). |
| தட்டச்சுப் பயிற்சி | — | சில்லாலை இளைஞர் கழகம், ஊறணை, இளவாலை. |
| உணவுப்பொருள் தயாரித்தல் | — | கிளிநொச்சி, கோப்பாய் |
| உடை உற்பத்தி நிலையம் | — | மல்லாகம் |
| ஓட்டுவேலை | — | மிருசுவில், கரம்பொன், யாழ்/அடைக்கலமாதா ஆலயம், கோப்பாய். |
| விவசாயம் | — | மயிலிட்டி. |
| மாடு, கோழி வளர்ப்பு | — | மிருசுவில், பொன்நகர், யாழ்/ஆசனக்கோவில். |
| துப்புத்தொழில் | — | ஜெயந்திநகர். மணியந்தோட்டம். |

மீனவ குடும்பங்களுளுக்கு மீன்பிடி உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக நாவாந்துறையில் மூன்று இலட்சம் ரூபாவில் ஒரு கடனுதவித்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.




7. வாழ்வகம், சேந்தான்குளம்
8. ஜெயபுரம் பாடசாலை திறப்புவிழா
9. மீனவர் உதவித்திட்டம், மாரீசன்கூடல்
11 வாழ்வகம், சேந்தான்குளம்
12. தற்காலிக வீடமைப்புப் பணி - பாரதிபுரம்
13. சிறுவர் பாடசாலை, சில்லாலை
14. சிறுவர் பாடசாலை, வல்வெட்டித்துறை
15. மீனவர் உதவித்திட்டம், மாரீசன்கூடல்
16. ஆரோக்கியநகர் வீடமைப்பு (திறப்புவிழா)
17. ம. மூ. ந. நிலைய விநியோகசேவை.







13


17






12




15




14


7




16



சமுதாயத்தில் மிகவும் ஒடுக்கப்பட்டோர் எனக் கருதப்பட்ட திருநகர் மக்களுக்காக கிட்டத்தட்ட 12 இலட்சம்ரூபா செலவில் ஒரு பாரிய வீடமைப்போடு கூடிய மாடு, கோழிப்பண்ணைகள் கொடிகாமத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்குறிப்பிட்ட செயற்திட்டங்கள் அண்மைக்காலத்தில் ஏற்பட்ட கலவரங்களாலும், இராணுவ நடவடிக்கையாலும் மிகவும் பாதிக்கப்பட்டாலும் இன்றும் தொடர்கின்றன என்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இவை போன்ற மேலும் பல செயல்திட்டங்கள், புனர்வாழ்வுத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

3. கல்வி:

1. இளைஞர் தலைமைத்துவம் (வாழ்வொளி — நிலையம் பண்டத்தரிப்பு. அன்பகம் - அச்சுவேலி. உதயதீபம் — உருத்திரபுரம்).

2. முதியோர் கல்வி, 3. முறைசாராக் கல்வி, 4. சுகாதாரக் கல்வி, 5. சாதி. சீதனம், பெண்கள்.

மேற்குறிப்பிட்ட ஐந்து தலைப்புகளில் தொடர்ச்சியாகச் செயற்பாடுகளும், கருத்தரங்குகளும் கிராம மட்டங்களிலும், பங்கு மட்டங்களிலும், மாவட்ட, மறைமாவட்ட மட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எமது நிலையம் பங்குக்குருக்களினூடாக எப்போதும் ஊக்குவித்தவண்ணம் இருக்கின்றது. தேவைப்படுபவர்கள் தமது தேவைகளைப் பங்குக்குருவின் ஊடாக எமக்கு அறிவிக்கும் பட்சத்தில் வேண்டிய ஒழுங்குகள் யாவும் மேற்கொள்ளப்பட்டு இச்செயற்பாடு திறம்பட நடைபெற ஆவன செய்யப்படும். அத்துடன் நற்சமூகப் பணிநிலையத்தினால் நடாத்தப்படும் தலைமைத்துவப் பயிற்சிக்கும் நிதி உதவி வழங்கப்படுகின்றது.

4. சுகாதாரம்:

1. முதலுதவித் தொண்டர் :

கிராமங்களிலிருந்து ஜீ. சி. ஈ. படித்தவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு மாதகாலம் அவர்களுக்கு நிறைவான பயிற்சியளிக்கப்பட்டு தத்தமது கிராமங்களில் தொண்டாற்ற அனுப்பப்படுகின்றனர். அத்தோடு நின்றுவிடாமல் மீண்டும் மீண்டும் அவர்கள் அழைக்கப்பட்டு கலந்துரையாடல்மூலம் அவர்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளுக்குத் தீர்வுகாணப்படுகின்றது.

2. குடிநீர் விநியோகம் :

நல்ல குடிநீர் கிடையாத பகுதிகளுக்கு குடிநீர் விநியோகத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. குழாய்க் கிணறுகளும், திறந்த கிணறுகளும் இத்திட்டத்தின்கீழ் அமைத்துக் கொடுக்

கப்படுகின்றன. இவை தனியாருக்கல்லாமல் குழுக்களாகப் பயன் பெறும் வகையில் நிர்மாணிக்கப்படுகின்றன.

3. மலசல கூடங்கள் :

மலசலகூட வசதியற்ற காரணத்தினால் மிகவும் அசுத்தமடையும் கிராமங்களில் வசதியற்றோருக்கு மலசல கூடங்கள் அமைத்துக்கொள்வதற்கு ஆவன மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

4. வைத்தியசாலை:

வைத்தியசாலைகளில் உதவியற்ற நோயாளிகளுக்கு (குறிப்பாக யாழ்/ வைத்தியசாலையில்) அருட்சகோதரிகள், அருட்தந்தையர் ஊடாக அவசியமான உதவிகள் வழங்கப்படுகின்றன.

5. நடமாடும் மருத்துவ சேவை:

கிராமங்கள் தோறும் சென்று அங்குள்ள சுகாதாரநிலையை ஆராய்ந்து மக்களைச் சந்தித்து அவர்களுக்கு சுகாதாரத்தைப்பற்றிய அறிவுரைகளை வழங்கவும் வைத்திய வசதியற்ற கிராமங்களில் நோயாளர்களைப் பார்வையிட்டும், வேண்டிய மருந்துகளையும் ஆலோசனைகளையும் வழங்கவும் ஒரு நடமாடும் மருத்துவ சேவைப்பிரிவு யாழ். திருச்சிலுவைக் கன்னியரின் ஊடாகச் செயற்பட்டு வருகின்றது.

இவற்றையெல்லாம்விட சமுதாயத்தில் தாமாகத் தவறியதாலும், பலாத்காரத்தினால் பாதிக்கப்பட்டதாலும் தமது வாழ்வை சிதைக்கமுயலும் பெண்களுக்குத் தன்னம்பிக்கையூட்டி அவர்களுக்கு மறுவாழ்வு வழங்குவதற்காக சில திட்டங்கள் அந்தரங்கமான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நிதியுதவி வழங்குவோர் :

எமது செயற்பாடுகளுக்கு யாழ். மறைமாவட்ட ஆயரும் அவர்கள் மூலமாக வெளிநாட்டு உள்நாட்டு நிதியுதவி ஸ்தாபனங்களும் நிதி உதவிகளை வழங்குகின்றன.

அவற்றில் சில :

| | |
|---|---|
| செடெக் | — இலங்கை |
| குரேன் | — வடகிழக்கு கத். நிறுவனம். |
| செபிமோ | — ஹொலன்ட் |
| கறிற்றாஸ் | — இன்ரர்நஷனல் |
| ,, | — இத்தாலி |
| ,, | — நெதர்லான்ட் |
| ,, | — ஜேர்மனி |
| ,, | — சுவிற்சலன்ட் |
| நொறாட் | — நோர்வே |
| ஏ. பீ. எச். டி. | — ஆசியா |
| மிசிறியோர் | — ஜேர்மனி |

| | | |
|---|---|---|
| சி. பி. எவ். ரீ. ஆர். ஆர். | — | லண்டன் |
| கபோட் | — | ,, |
| கெயர் | — | சிறிலங்கா — இன்ரர் நஷனல் |
| ரோகெயர் | — | அயர்லாந்து |
| கனேடிய தூதராலயம் | — | கொழும்பு |
| ஒக்ஸ்பாம் | — | லண்டன் |

## புனர்வாழ்வு நிலையங்களில் பணிபுரியும் தொண்டர்கள்

திரு. ஜஸ்ரின் பெர்னண்டோ தேவன்குளம், திரு. எஸ். பி. பீற்றர் ஜெயபுரம், திரு. எஸ். மரியதாஸ் குழந்தையேசு கிராமம், திரு. வீ. ஏ. ராஜா ஜெயபுரம், திரு. இ. கணேசப்பிள்ளை பொன்னகர், திரு. எம். அன்ரன் ஆரோக்கியநகர், திரு. லுட்விக் வட்டக்கச்சி, செல்வி. சாந்தா பெர்னண்டோ குழந்தையேசு கிராமம், செல்வி. எஸ். றீற்று குழந்தையேசு கிராமம், செல்வி. பரமேஸ்வரி குழந்தையேசு கிராமம், செல்வி. எஸ். றோஸ் குழந்தையேசு கிராமம், திரு. ஈ. அகஸ்ரின் ஜெயபுரம், திரு. ஏ. செபமாலை தேவன்குளம், செல்வி. எம். வசந்தி ஜெயபுரம், செல்வி. எஸ். யோகராணி ஆரோக்கியநகர், செல்வி. மகேஸ் ஜெயபுரம், செல்வி. எம். சித்திரா ஜெயபுரம், செல்வி. றூபி வாழ்வகம், செல்வி. ஜெயா வாழ்வகம். திரு. ஏ. ஸ்ரீபன் நியோகுநகர், திரு. பூபாலசிங்கம் நியோகுநகர், திரு. ஆர். எல். சேவியர் நியோகுநகர்.

## நீதி சமாதான அபிவிருத்தி ஆணைக்குழு (1986 - 1989)

**தலைவர்:-** அருட்திரு. ம. இ. பயஸ்.

**செயலாளர்:-** திரு. அ. சந்தியாப்பிள்ளை, மாதகல்.

**அங்கத்தவர்:-** அருட்திரு. கி. ஜெபநேசன், அருட்திரு. கமில்லஸ் நிமலன், திரு. எஸ். சிறில், யாழ்ப்பாணம். அருட்திரு. ஜே. எ. யேசுதாசன், திரு. எஸ். மேரி யோசேப்பு, இளவாலை, அருட்திரு. எம். எம். வி. அமிர்தகுமார், திரு. பருத்தித்துறை, மிருசுவில். திரு. துரைராசா, பரந்தன். அருட்திரு. கே. பி. சந்தியாப்பிள்ளை, அருட்திரு. எஸ். எம். செபஸ்ரியன், அருட் செல்வி. கு. றீற்று, அருட் செல்வி. திரேசியா, அருட் செல்வி. சுகிரிதா, அருட் செல்வன். சகாயராசா எஸ். எஸ். யே. அருட் திரு. ஜி. ஈ. எம். யோசேப்பு, அருட் திரு. எம். ஏ. யோகராசா, அருட்திரு. யே. ஜி. இராசேந்திரம். யாழ்ப்பாணம்.

# பிறர் கொலையல்ல—
# தற்கொலை!

அன்பர்களே,

*மானிட உயிரின் மாண்பினை மதி — அன்றேல்*
*அழிவே எமது கதி.*

நாளுக்குநாள் வளர்ந்து செல்லும் பயங்கர நிகழ்வுகள், உயிரிழப்புக்களைக் கொண்ட சூழல் மத்தியிலும், எந்நேரத்திலும் எவரினதும் உயிர் பறிக்கப்படலாம் என்ற வன்முறை வட்டத்திற்குள்ளும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

இந்நிலை இனியும் நீடிக்க வேண்டுமா? இதனை யாராவது நிறுத்துவார்கள் என்ற எதிர்பார்ப்பு மனநிலை மாறவேண்டும். அமைதியும், அன்பும், நீதியும், சமாதானமும் எம்மிடையே நிலவ நாம் என்ன செய்யப் போகிறோம் என்ற நல்லெண்ணம் நமக்குள்ளே வேர்விடவேண்டும். இவ்வளவு காலமும் எம் உயிரைக் காப்பாற்ற அடுத்தவர் உயிரைப் பறித்தோம். உண்மையில் யாராவது ஒருவர் இறக்கும் போது என்னில் ஒரு பகுதியே இறக்கின்றது. இந்நிலை நீடிக்குமானால் எனதும், எமதும் எதிர்காலமே சூனியமாகிவிடும்.

எனவே அடுத்தவனுயிர் என்று அசட்டை செய்துவிட முடியாது. எமது உயிர் காப்பாற்றப்பட வேண்டுமானால் மற்றவர் உயிரை நாம் பாதுகாக்க வேண்டும். இந்நிலை எமது இனத்தை அசுர வேகத்தில் அழித்துக் கொண்டிருப்பதால் நாம் ஒவ்வொருவரும் அதை மாற்றியமைக்க ஆக்கபூர்வமாகச் செயற்படுவோம். ஒருவர் ஒருவரின் உயிரை மதிப்போம்.

அருட்திரு ம. இ. பயஸ்
தலைவர்.

அ. சந்தியாப்பிள்ளை
செயலர்.

# நத்தார் 89 — புதுவருடம் 90

## நண்பர்களுக்கு உறவினர்களுக்கு என்ன பரிசு கொடுப்பது?

- நல்ல பரிசாகக் கொடுங்கள்
- ஆண்டு பூராகவும் உதவக் கூடிய பரிசாகக் கொடுங்கள்

✻ இத்தாளை வெட்டி, குறித்த தொகையுடன் எங்கள் முகவரிக்கு அனுப்புங்கள்.

✻ உங்களுக்குத் தொல்லையின்றி நாமே ஆண்டுபூராகப் பரிசை அனுப்பி வைப்போம்.

▲ நீங்கள் கொடுப்பது — கொடையில் சேவை

▲ நாங்கள் அனுப்புவது — கருத்துப் பரிமாறலில் சேவை

▲ அவர்கள் பெறுவது — சிந்தனையில் வளர்ச்சி

***சிறப்பான பரிசு! நிலைக்கும் பரிசு!! பயன்படும் பரிசு!!!***

---

நத்தார் 89 — பரிசு !

புதுவருடம் 90 — பரிசு !

கொடுங்கள் ! கொடுங்கள் ! கொடுங்கள் !

---

இழித்தெறிக்கவும்

# நத்தார் 89 — புதுவருடம் 90

## பரிசுப் படிவம்

தயவு செய்து ..........................................................................
(பெயர்)

முகவரிக்கு ..........................................................................

..........................................................................

'புதிய உலகப்' அனுப்பிவைக்கவும். இத்துடன் பரிசுக்குரிய கட்டணமாக ரூபா 30/- ரூபா 55/- ரூபா 75/- காசுக்கட்டளையாக (M. O.) தபாற்கட்டளையாக (P. O.) அனுப்பி வைக்கிறேன்.

ரூபா ..................

திகதி ..................

..........................................
கையொப்பம்

காசு அனுப்புபவரின் முகவரி

..........................................

..........................................

- சிறிய பரிசு – ஓராண்டுச் சந்தா — ரூபா 30-00
- பெரிய பரிசு – ஈராண்டுச் சந்தா – ரூபா 55-00
- கைநிறைந்த பரிசு - மூவாண்டுச் சந்தா - ரூபா 75-00

தபாற் செலவை நாம் பொறுத்துக் கொள்வோம்.

# உங்கள் பார்வை

பங்குனி — சித்திரை சிறப்பிதழை வாசித்தேன். அண்ணன் விஜயந்திரனின் கவிதை என்னை மிகவும் கவர்ந்துள்ளது. தமிழனாகப் பிறந்த எனக்கு இந்நிலை எப்போது தான் மாறுமோ? "வேலியே பயிரை மேய்ந்தால்" என்னும் சிறுகதை தேனாகத் திகழ்ந்தது. அத்தோடு வல்விபுரம் பரமேஸ்வரியின் தாயகம் திரும்பும் வெளிநாட்டு அகதிகளால் நன்மையைவிட நாசமே அதிகம் என்ற கருத்துமோதல் நல்ல கருத்தம்சங்களோடு அமைந்தது. இதைப் பார்த்து விட்டாவது தாய்நாடே தம்மவவரின் பொன்நாடு என்று நினைத்து வெளிநாடு செல்லாமல் இருப்பார்கள் என்று நினைக்கின்றேன். இதுபோன்ற நல்ல கருத்துமோதலைப் பார்க்கத் துடிக்கின்றேன். இத்துடன் புதிய உலகம் சிறந்தோங்க எனது நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக!

ம. வசந்தகுமார்
கட்டைக்காடு
முள்ளியான்.

★ ★

"புதிய உலகம்" பதிப்புகள் தொடர்ந்தும் படித்துப் பயன் பெறுகிறேன். இக்காலகட்டத்தில் இவ்வாறானவோர் சஞ்சிகையைப் பதிப்பித்து, தொடர்ந்தும் நடாத்தி வருவதையிட்டு மகிழ்ச்சியுடன் ஈழத்து இளைஞர்கள் சார்பாக எமது நன்றிகள் தெரிவிக்க விரும்புகிறேன்.

உங்கள் பணி மேலும் சிறந்து ஓங்க எமது வாழ்த்துக்கள்

நி. துதிகாந்தன்
பரந்தன்.

## அட்டைப் படங்கள்

1. மனித முன்னேற்ற நடுநிலையம்
2. 31-8-1989-ல் ம. மு. ந. நிலையத் திறப்புவிழா
3. ம. மு. ந. நிலையத் திறப்புவிழா
4. 10—வது சுகாதார சேவைப்பயிற்சி நிறைவுநாள்
5. ம. மு. ந. நிலையத்தின் பிறிதொரு தோற்றம்
6. 'வாழ்வகம்' அகதிகள் புனர்வாழ்வுத் திட்டம், சேந்தான்குளம்.

